'நானும் என் வீட்டாரும் ஆண்டவருக்கே ஊழியம் செய்வோம்' (யோசு 24:15)

# நற்செய்திப் பணியாளர்

(சிவகங்கை மறைமாவட்ட தன்னார்வ நற்செய்திப் பணியாளர்களின் மாதச் செய்தி மடல்)

அருள் : XVI அக்டோபர் கி.பி. 2025 சான்று : 190



# எதிர்நோக்கின் மாலை

# புதிய பணியாளர்கள் பயிற்சி






























**பாசத்திற்குரிய உடனுழைக்கும் நற்செய்திப் பணிக் குடும்பமே,**

'எதிர்நோக்கைத் தரும் கடவுள் நம்பிக்கையால் உண்டாகும் பெரு மகிழ்ச்சியாலும் அமைதியாலும் உங்களை நிரப்புவாராக! அவ்வாறு தூய ஆவியாரின் வல்லமையால் நீங்கள் இன்னும் மிகுதியான எதிர் நோக்குடன் வாழ அருள் புரிவாராக' (உரோ 15: 13) என்ற பவுலடியாரின் வார்த்தையை உங்கள் அனைவருக்கும் உரித்தாக்கி, அவருடைய இறை வேண்டலையையே நானும் செய்கிறேன். இந்த இதழ் வழியாக உங்கள் அனைவரையும் சந்திப்பதிலேயே பெரு மகிழ்ச்சி அடைகிறேன். வானவில் கூடுகையிலே உங்கள் அனைவரையும் ஒரே இடத்தில் சந்தித்ததிலே பெரு மகிழ்ச்சியும், ஊக்கமும் பெற்றுள்ளேன். கடவுளின் பேரருளால் அவர் மாட்சி மட்டுமே விளங்க வானவில் கூடுகை மிக சிறப்பாக நடந்தேறி இருக்கிறது. நாம் அத்தனை பேரும் நம் ஆவிக்குரிய வாழ்வில் இன்னும் கொஞ்சம் முன்னேற இக்கூடுகை பேருதவி புரிந்திருக்கிறது என்பதை மறுக்க முடியாது.

எதிர்நோக்கு ஒருபோதும் ஏமாற்றம் தராது. ஏனெனில் நாம் பெற்றுள்ள தூய ஆவியாரின் வழியாய் கடவுளின் அன்பு நம் உள்ளங்களில் பொழியப்பட்டுள்ளது' (உரோ 5:5) என்ற பவுலடியாரின் கூற்று உண்மையானது. நாம் ஒவ்வொருவர் மேலும் கடவுளின் அன்பு இக்கூடுகை மூலம் அதிக அதிகமாய் பொழியப்பட்டுள்ளது. இந்த அனலை நாம் ஒருபோதும் விட்டு விடக்கூடாது.

நாம் அனைவரும் எதிர் நோக்கின் திருப்பயணிகளாய், அதுவும் நிறை வாழ்வை நோக்கிய எதிர்நோக்கின் திருப் பயணிகளாய் பயணித்துக் கொண்டிருக்கிறோம். நமது முதன்மையான நோக்கம் என்ன? கடவுளைக் காண வேண்டும் என்பதே .ஏன் இந்த நோக்கம்? என்ற கேள்விக்கு பதில் தேடினால் நாம் வரலாற்றின் தொடக்க நாட்களுக்குள் செல்ல வேண்டும் .தன்னில் தானே முழுமையாக இருந்த கடவுள், தனக்கென எந்த தேவையும் இல்லாது இருந்த கடவுள், தானே உருவாக்கிய படைப்புகள் இல்லாமல் தம்மால் முழுமையாக இருக்க முடியாது என்ற நிலையை தானாகவே ஏற்படுத்திக் கொண்டதாக தெரிகிறது. 'எங்கள் ஆண்டவரே, எங்கள் கடவுளே, மாட்சியும் மாண்பும் வல்லமையும் பெற நீர் தகுதி பெற்றவர். ஏனெனில் அனைத்தையும் படைத்தவர் நீரே. உமது திருவுளப்படியே அவை உண்டாகின, படைக்கப்பட்டன (திவெ 4:11) என்று இருபத்து நான்கு மூப்பர்கள் பாடியதாக புனித யோவானுக்கு வெளிப்பாடு அருளப்பட்டது. வேறு எந்த நோக்கத்திற்குமல்ல, இந்த நோக்கத்திற்காகத்தான், கடவுளின் விருப்பத்திற்காகத்தான் மனிதன் உருவாக்கப் பட்டான். கடவுளின் மகிழ்ச்சியாக, அவரது அன்பை முழுமையாக பெறுபவனாக இருக்கும்படிதான் மனிதன் படைக்கப்பட்டான். மனிதனின் இந்த தொடக்க உறவு கடவுளை மையப்படுத்தியதாகத்தான் இருந்தது. கடவுளை மகிழ்ச்சி படுத்துவதற்காகவே, தான் படைக்கப்பட்டதாக மனிதன் அறிந்திருந்தான். கடவுளின் அன்புக்கு பதில் செய்வது, அவரோடு இருப்பது, அவருக்காக வாழ்வது, அவரது திருவுளத்தை நிறைவேற்றுவது போன்றவை மட்டும்தான் அவன் வாழ்வில் மையச் செயல்பாடுகளாக இருந்தன. படைத்தவரது திருவுளத்திற்கு தொடர்ச்சியாக தன்னை சரணாகதியாக்குவது, அவரை அல்லாமல் தனியாக எதையும் செய்யாமல் இருப்பதுதான் அவனுடைய இயல்பாக இருந்தன. கடவுளின் ஆவி அதாவது மூச்சுக்காற்று மனிதனின் ஓடிக்கொண்டிருந்ததால் எளிதில் கடவுளின் ஆவியோடு அவன் இணைந்து இருப்பதில் பெரிய பிரச்சனை ஒன்றும் இல்லை.

கடவுளைக் காண்பதுவும், அவருடன் உயிருள்ள உறவில் இருப்பதும் தான் மனிதனின் முதன்மையான நோக்கம். இந்த நோக்கத்திற்காக மட்டுமே நாம்

படைக்கப்பட்டிருக்கிறோம். இந்த உலகத்தில் நாம் இருப்பதற்கான ஒரே காரணமும் இதுதான். இருந்தாலும் இவை எல்லாவற்றையும் விட நாம் கடவுளைக் காண்பது என்பதுதான் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் இந்த உலகத்தை கடவுள் மீட்டதற்கான காரணமும் ஆகும்.

மனிதன் பாவத்தில் விழுந்து இறையுறவை இழந்து நின்ற நிலைக்கு முன்பாக ,தொடக்க நிலையில் இருந்த இறை மனித உறவு பற்றி இறையியலார் சி. எஸ். லூயிஸ் என்பார் இவ்வாறு கூறுகிறார்.' தொடர்ச்சியாக நடந்த முழுமையான இயக்கத்தில், இருத்தலில் வல்லமை மற்றும் மகிழ்ச்சி போன்றவை கடவுளிடமிருந்து மனிதனுக்கு இறங்கி வந்தது. இது கொடை என்ற வடிவத்தில் கடவுளிடமிருந்து மனிதனுக்கும், கீழ்ப்படிதலுடன் கூடிய அன்பு, மகிழ்ச்சியான புகழ்ச்சி என்ற வடிவத்தில் மனிதனிடமிருந்து கடவுளுக்கும் சென்று கொண்டே இருந்தது. இவைதான் மனித வரலாற்றின் பொற்காலமாக இருந்தது (நன்றி: இயேசுவைக் காண விரும்புகிறோம்)

எதிர்நோக்கின் திருப்பயணிகளாக இவ்வுலகில் வாழ்ந்து வரும் நாம் படைக்கப்பட்டதன் முதன்மையான, ஒரே நோக்கம் கடவுளைக் காண்பதுவும் அவருடன் உயிருள்ள உறவில் இருப்பதும்தான் .இந்த உலகில் நாம் வாழ்ந்து கொண்டிருப்பதன் ஒரே காரணமும் இதுதான். மனிதன் அந்த நோக்கத்தை இழந்து போய்விட்டான். கடவுளுடனான அந்த அன்புள்ள, கீழ்ப்படியும் உறவானது அதிக காலம் நீடிக்க வில்லை. கடவுளுடன் மென்காற்று வீசிய பொழுதினிலே ஏதேன் தோட்டத்தில் உலாவிய உன்னத நிகழ்வு முடிவுக்கு வந்தது(தொநூ 3:8) பாவம் ஏதேன் தோட்டத்திற்குள் நுழைந்து, மனிதன் மீட்கப்பட வேண்டிய நிலைக்கு ஆளானான். கடவுளுக்காக தான் உருவாக்கப்பட்டவன் என்ற மேன்மையான நிலையை, உண்மையை மனிதன் புரிந்து கொள்ளவில்லை. தூய்மையற்ற மனிதனோடு தூய்மையான கடவுள் உறவோடு இருக்க முடியாது. தூய்மைக்கும் பாவத்திற்கும் தொடர்பு இருக்க முடியாது என்பதால் (தொநூ 3:10) மரத்தின் பின் ஒளிந்து கொண்டான்.

நாமும் கூட இந்த முதல் பாவிகளின் வழியில் வந்தவர்கள் என்பதால் நாமும் அவர்களின் பங்காளிகள் ஆகிறோம். எனவேதான் கிறிஸ்துவின் பங்காளிகளாக மாற எதிர்நோக்கின் திருப்பபணிகளாக பயணிக்க அழைக்கப்படுகிறோம். மீட்புத் திட்டம்(தொநூ 3:15) அறிவிக்கப்பட்டு அது சிலுவையில் நிறைவேறியும் விட்டது. 'நமக்கு மீட்பு கிடைத்துவிட்டது எனினும் எதிர்நோக்கும் அளவில்தான் அது கிடைத்துள்ளது. கண்ணுக்கு தெரிகிறதை நோக்குதல் எதிர்நோக்கு ஆகாது. ஏற்கனவே கண்ணால் காண்கிறதை எவராவது எதிர்நோக்குவாரா?(உரோ 8:24) என்று புனித பவுலடியார் எதிர்நோக்கின் திருப்பயண வாழ்வின் அடி நாதத்தை பறை சாற்றுகிறார். மேலும், 'நாமோ காணாத ஒன்றை எதிர்நோக்கி இருக்கும்போது, அதற்காக தளரா மனதோடு காத்திருக்கிறோம்' (உரோ 8:25) என்று தெளிவாக கூறியிருக்கிறார். நம் அனைவரின் ஒப்பற்ற முதன்மையான நோக்கம் இயேசுவைக் காண்பது. இவ்வுலகிலேயே அவரை தனிப்பட்ட முறையில் ருசித்து, அனுபவித்து நம்முடைய நற்செயல்கள் மூலம் காணவில்லை என்றால் விண்ணகத்திலும் அவரை காண முடியாது. இவ்வுலகிலேயே அவர் இருக்கும் இடத்தில் நாம் இருக்கவில்லை என்றால் விண்ணகத்திலும் அவ்வாறு இருக்க முடியாது. எனவே தளராமனத்தோடு இவ்வுலகிலேயே அதன் முன் சுவையை உணர்ந்து, வாழ்ந்து கடவுள் திட்டமிட்ட நேரத்தில் அவரைக் கண்டு மகிழ ஒருவர் ஒருவருக்காக செபிப்போம்.

உறவிலும் பணியிலும் உங்களோடு பயணிக்கும்

உங்கள் சகோதரன்

**நற்பணி அ. சகாயராஜா**

## புதிய பணியாளர்கள் பயிற்சி

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - I பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் 07.09.2025 அன்று நடைபெற்றது. இப்பயிற்சியில் 5 நபர்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி K. ஜஸ்டின் கபிரியேல், நற்பணி A. ஆரோக்கியமேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - II காளையார்கோவில், தந்தை. ஜோசப் சேவியர் அரங்கில் 07.09.2025 அன்று நடைபெற்றது. இதில் 7 நபர்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி A. பிரான்சிஸ் சேவியர், நற்பணி P. சகாயராணி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி - III தங்கச்சிமடம், புனித குழந்தை தெரசாள் கோவிலில் 13.09.2025 அன்று நடைபெற்றது. இதில் 14 நபர்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி G.M.S ராணி, நற்பணி X. லூர்துமேரி, ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - IV இராமநாதபுரம், புனித செபமாலை அன்னை கோவிலில் 14.09.2025 அன்று நடைபெற்றது. இதில் 7 நபர்கள் கலந்து கொண்டனர் இப்பயிற்சியை நற்பணி J. மேரிபுஷ்பம், நற்பணி A. ஆரோக்கியமேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி - V சிவகங்கை, வியான்னி அருள்பணி மையத்தில் 14.09.2025 அன்று நடைபெற்றது. இதில் 5 நபர்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி GM.S ராணி, நற்பணி A. யூஜின் அமல்ராஜ் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி - VI ஓரியூர் புனித அருளானந்தர் திருத்தலத்தில் 14.09.2025 அன்று நடைபெற்றது. இதில் 5 நபர்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி J. ஆரோக்கியசாமி, நற்பணி இரா அருள்பிரகாசம் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - VII அமைதியகம், காயாவயலில் 21.09.2025 அன்று நடைபெற்றது. இதில் 10 நபர்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை Sr. செலின்பிரபா, நற்பணி J. ஆரோக்கியசாமி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - VIII சாயல்குடி, புனித ஆரோக்கிய அன்னை கோவிலில் 21.09.2025 அன்று நடைபெற்றது. இதில் 5 நபர்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி M. அருள் மரியநாயகம், நற்பணி A. சந்திரபுஷ்பா ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - IX சி.கே. மங்கலம், புனித பேதுரு கோவிலில் 21.09.2025 அன்று நடைபெற்றது. இதில் 11 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி J. ஆரோக்கியசாமி, நற்பணி A. ஜான்சிமேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - X இராசசிங்கமங்கலம், தூய ஆவியார் கோவிலில் 21.09.2025 அன்று நடைபெற்றது. இதில் 6 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி S. இராஜேந்திரன், நற்பணி கோ. அம்பிகா எலியாஸ், நற்பணி S. தைனஸ்மேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

செப்டம்பர் 2025

## கடந்த மாதச் செயல்பாடுகள்

03.09.2025 அன்று காயாவயல் அமல அன்னை அமைதியகத்தில் அருளமுது ஆதாரக் கூடுகை நடைபெற்றது. 36 பேர் இணைந்து செபித்த இவ்வழிபாட்டை நற்பணி J. அருள் இளங்கோ, நற்பணி S. அந்தோனி பிரகாஷ், நற்பணி. V. ஜெய சீலி ஆகியோர் வழிநடத்தினர்கள்.

03.09. 2025 அன்று பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் அருளமுது ஆதாரக் கூடுகை நடைபெற்றது. 70 பேர் இணைந்து செபித்த இவ்வழிபாட்டை நற்பணி S. மோட்ச அலங்காரம், நற்பணி A. ஜான்சிமேரி, நற்பணி மரிய புஷ்பம் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

5,6&7.09 2025 ஆகிய நாள்களில் சீடத்துவப் பயிற்சியை நிறைவு செய்து அர்ப்பணம் எற்கவுள்ளோருக்கான தேர்ந்து தெளிந்து தியானம் அமைதியகத்தில் நடைபெற்றது இதில் 80 பேர் கலந்து கொண்டார்கள்.

05.07.2025 அன்று திரு இருதய ஆண்டவர் திருத்தலத்தில் பரிந்துரை செபம் நடைபெற்றது. செஞ்சை வட்டாரப் பணியாளர்கள் நற்பணி குழந்தைசாமி, நற்பணி செல்வி கிரேஸ், நற்பணி புஷ்பம், நற்பணி கமலா புஷ்பம் ஆகியோர் பங்கேற்றனர்.

14.09.2025 அன்று கோட்டைக்காட்டில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி A. சத்தியேந்திரன், நற்பணி S.பால்ராஜ் அவர்கள் வழிநடத்தினார்கள்.

14.09. 2025 அன்று பட்டுக்கோட்டை, உலக இரட்சகர் கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இதை நற்பணி S.அந்தோனி பிரகாஷ் அவர்கள் வழிநடத்தினார்கள்.

14.09. 2025 அன்று பூதலூர், புனித மரியன்னை கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இதை நற்பணி S. மோட்ச அலங்காரம், நற்பணி A.R.சூசைராஜ் அவர்கள் வழிநடத்தினார்கள்.

21.09. 2025 அன்று புதுக்கோட்டை திரு இருதய ஆண்டவர் கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இதை நற்பணி A. சத்தியேந்திரன் நற்பணி நீ. பால்ராஜ் அவர்கள் வழிநடத்தினார்கள்.

21.09. 2025 அன்று அம்மாபேட்டை, புனித லூர்துமாதா கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இதை நற்பணி A.R.சூசைராஜ், நற்பணி A. ஆரோக்கியசாமி அவர்கள் வழிநடத்தினார்கள்.

21.09.2025 அன்று திருமயம், புனித அடைக்கலமாதா கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இதை நற்பணி M. மரிய கிரகோரி, நற்பணி M. விசுவாசம் அவர்கள் வழிநடத்தினார்கள்.

21.09. 2025 அன்று திருவாளூர், புனித பாத்திமா அன்னை கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இதை நற்பணி A. சகாயராஜா, நற்பணி S. சகாயராணி அவர்கள் வழிநடத்தினார்கள்.

21.09. 2025 அன்று நமணசமுத்திரம், குழந்தை இயேசு கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இதை நற்பணி |. ஆரோக்கியசாமி, நற்பணி M.லூயி ஜான்போஸ்கோ அவர்கள் நெறிபடுத்தினார்கள்.

26,27&28.09.2025 ஆகிய நாட்களில் தேவகோட்டை ரஸ்தாவிலுள்ள ஆனந்தா அருங்கொடை மையத்தில் வானவில் கூடுகை -2025 சிறப்பாக நடைபெற்றது. பிற மறைமாவட்ட பணியாளர்கள் உட்பட ஆயிரத்த்திற்கும் மேற்பட்ட நற்செய்தி கலந்து கொண்டனர். இறுதிநாளில் சீடத்துவப் பயிற்சியை நிறைவுசெய்த சிவகங்கை மறைமாவட்ட 60 பேர் தன்னார்வ நற்செய்திப்பணியாளர்களாக அர்ப்பபணம் எற்றனர்.

## இதய தாகம் நீ

'வாழ்வின் நீருற்று நீர்தானப்பா உம்மில் நான் தாகம் கொண்டேன்'.

தாகம் கொள்வது என்பது நாம் நமக்கு தேவையானவற்றில் மிகவும் விரும்புகின்ற செயல்களில் காட்டுகின்ற அளப்பரிய ஆர்வமாகும். உலகில் நிலவும் அனைத்துப் பொருள்களும் நிலையற்றவை. நாம் அனுபவிக்கின்ற செயல்கள் எதிலுமே நமக்குத் தாகம் தீராது. அது உடையானாலும், உணவானாலும், ஆபரணங்களானாலும் அழகு சாதன பொருள்களானாலும் விருந்துகளானாலும் நட்பானாலும் உறவானாலும், பதவியானாலும், பட்டமானாலும், வருமானமானாலும் மற்ற எதுவானாலுமே ஒரு போதும் அதன் மீதுள்ள தாகம் தீருவதில்லை. எனவே நமது தாகம் வாழ்வின் ஊற்றாகிய இறைவனிடம்

உண்டாக வேண்டும் உயிருள்ள ஊற்றாகிய இறைவனிடம் நீர் பருகும்போது நமது அனைத்து தாகமும் தீர்ந்து நிறைவு ஏற்படும்.

திருப்பாடல்களை பாடிய தாவீது அரசர் தம் பாடல்களில் அவரது நெஞ்சமும் உயிரும் இறைவன் மீது உயிருள்ள கடவுள் மீது தாகம் கொண்டுள்ளதாக எழுதுகிறார். "என் நெஞ்சம் கடவுள்மீது உயிருள்ள இறைவன் மீது தாகம் கொண்டுள்ளது" (திபா 42:2) என்றும் என் உயிர் உம்மீது தாகம் கொண்டுள்ளது (திபா 63:1) என்கிறார்.

அவரது தாகம் மிகவும் உயர்வானது. உண்மையாகவே தாகம் தீர்ப்பவரிடம் உயிருள்ள இறைவனிடமே அவருக்கு தாகம் ஏற்பட்டுள்ளது. ஆகையால் தான் அவர் உமது பேரின்ப நீரோடையில் அவர்கள் தாகத்தை தணிக்கின்றீர். ஏனெனில் வாழ்வு தரும் ஊற்று உம்மிடமே உள்ளது. (தி.பா 36:8-9) எனக் கூறினார்.

தாவீது அரசரின் முந்தைய தாகம் பாவ செயல்களுக்கு இட்டுச் சென்றது. அவரின் படைவீரரான ஊரியாவின் மனைவி பத்சேபாவிடம் தவறான தொடர்பு கொண்டார். அதனால் பத்சேபா கருவுற்றாள். அதனை ஊரியா அறியக்கூடாது என்பதற்காக போர்க்களத்திலேயே அவனைக் கொன்றார். பின்பு ஊரியாவின் மனைவியை தன் மனைவியாக்கி கொண்டார். இவ்வாறாக மாற்றானின் மனைவியின் பால் தாகம் கொண்டதால் தொடர்ந்து அவர் பாவம் செய்ய நேரிட்டது. பின்பு கடவுள் இறைவாக்கினர் நாத்தான் வழியாக தாவீதுக்கு அவரின் தவறான தாகத்தைச் சுட்டிக் காட்டினார். தாவீது தனது குற்றத்தை உணர்ந்தவராய் நொறுங்கிய நெஞ்சத்தோடு இறைவனிடம் பாவ மன்னிப்பு வேண்டி செபித்தார்.

நமக்கு வாழ்வு தரும் ஊற்றாகிய இறைவன் தாவீதின் பாவமென்னும் தாகத்தை தணித்தார். தாவீதும் மனந்திருந்திரும்பினார். "யாரேனும் தாகமாய் இருந்தால் என்னிடம் வரட்டும் என்னிடம் நம்பிக்கை கொள்வோர் பருகட்டும் அவருடைய உள்ளத்திலிருந்து வாழ்வு தரும் தண்ணீர் ஆறாய்ப் பெருக்கெடுத்து ஓடும்" (யோவான் 7:37-38). சவுல் என்பவர் திருஅவைக்கு எதிராகச் செயல்பட்டு வந்தவர். அதைத் துன்புறுத்தி அழித்தவர். திரு அவையை சேர்ந்த ஆண்களையும் பெண்களையும் இழுத்து கொண்டு போய் சிறையிலடைத்தவர். ஆண்டவரின் சீடர்களைக் கொன்று விடுவதாக அச்சுறுத்தி வந்தவர். அச்சமயத்தில் "சவுல் தமஸ்கு நகர நோக்கி சென்று கொண்டிருக்கையில் ஆண்டவர் தடுத்தாட்கொண்டார். அதன்பிறகு சவுல் இயேசு ஆண்டவரிடம் நம்பிக்கை கொண்டார்; திருஅவையை ஏற்றுக் கொண்டார்.

சவுலின் உள்ளத்திலிருந்து வாழ்வு தரும் தண்ணீர் ஆறாய்ப் பெருக்கெடுத்து ஓடியது. கிறிஸ்தவ மறையை பரப்ப உலகின் பல பகுதிகளுக்கு பயணம் செய்தார். முதன்மைத் திருத்தூதராக விளங்கினார். வாழ்வு தரும் தண்ணீராகிய இயேசுவிடம் தாகம் கொண்டதனால் திருத்தூதர் பவுலாக. மாற முடிந்தது.

"நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கும் எவருக்கும் என்றுமே தாகம் எடுக்காது நான் கொடுக்கும் தண்ணீர் அதைக் குடிப்பவருக்குள் பொங்கி எழும் ஊற்றாக மாறி நிலைவாழ்வு அளிக்கும்" (யோவான் 414).

நிலைவாழ்வாகிய இறையரசினை பெற நம் பாவ தாகங்களிலிருந்து விடுபட வேண்டும். இறைக்கட்டளைகளை மீறுவதே பாவமாகும். நாம் நமது குற்றமுள்ள நிலையை உணர்ந்து அனைத்தையும் இறை இயேசுவின் காயம்பட்ட திருக்கரங்களில் ஒப்படைக்க வேண்டும். நம் இதய தாகம் இறைத் தாகமாக மாற வேண்டும். அப்போது வாழ்வு தரும் தண்ணீராகிய இறைவன் நமது தாகங்கள் எல்லாவற்றையும் தீர்த்து நம்மை நிலைவாழ்விற்கு அழைத்து செல்வார். பொங்கி எழும் ஊற்றிலிருந்து தண்ணீரை தந்து எமது தாகத்தை தணியும் என்று செபிப்போம். அனைத்து பாவ தாகங்களிலிருந்து விடுபட்டவர்களாய் இறைவழியிலே நாள்தோறும் நடப்போம்.

நற்பணி. V.**செபஸ்டியன் தார்சிஸ்,** செஞ்சை.

இந்த இறைவாக்குகளைப் படிப்போர் பேறு பெற்றோர் (தி.வெ.1:3)

இன்றைக்கு கடவுளின் இறைவாக்குகளை அனைவரும் படித்து அறிவது என்பது மிகப்பெரிய சவாலாக உள்ளது. ஏனெனில் இறைவார்த்தையை கேட்டுவிட்டு மீண்டும் அவைகளை நினைவுபடுத்தி படிக்காமல் விட்டுவிடும் போது சாத்தான் வந்து அவர்களுள் விதைக்கப்பட்ட வார்த்தைகளை எடுத்துவிடுகிறான். (மாற் 4:15). இந்து மதத்தில் மனுதர்மம் என்ற நூலை எல்லாரும் படித்து அறிய இயலாது. ஏனென்றால் ஒரு குறிப்பிட்ட சாதியினர் மட்டுமே அதைப் படிக்க வேண்டும். மற்றவர்கள் அதை படிக்கக் கூடாது என்ற சட்டம் அவர்களிடம் உள்ளது. அதுபோல நாம் சார்ந்துள்ள கத்தோலிக்க திருஅவையிலும் ஆயர்களும் குருக்களும் மட்டுமே திருவிவிலியம் படிக்க வேண்டும். பொது நிலையினர் யாரும் இதைப் படிக்கக் கூடாது என்று 1229ம் ஆண்டு அப்போது இருந்த திருத்தந்தை மூலம் சட்டம் கொண்டு வரப்பட்டது. ஆனால் தூய ஆவியானவர் அந்த சட்டத்தையெல்லாம் தகர்த்தெரிந்து அனைவரும் இந்த வாழ்வின் நூலைப் படிக்கும்படி செய்திருக்கிறார். ஏனென்றால் கடவுளின் இந்த இறைவார்த்தைகளை யாராலும் சிறைபடுத்த முடியாது (2 திமொ 2:9). உலகில் உள்ள அனைத்து மனிதரும் இதைப் படித்து உண்மையை அறிந்து அதன் வழியாக மீட்புப் பெற வேண்டும் என்பது தந்தையாம் கடவுளின் திருவுளம் (1 திமொ 2:-5) தொடக்க காலத்தில் கிறிஸ்தவர்கள் வேதம் படிப்பவர்கள் என்றும் வேதக்காரர்கள் என்றும் அழைக்கப்பட்டார்கள். நாம் ஏன் இந்த திருவிவிலியத்தைப் படிக்க வேண்டும்? ஏனென்றால் தந்தையாம் கடவுளின் முழு விருப்பமும் இந்நூலில் உள்ளது. நம்மைப் பற்றிய அவரது ஏக்கம் இதில் உள்ளது. நம்மைப் பற்றியும் நம் குடும்பங்கள், பிள்ளைகள், பேரப் பிள்ளைகள் கடவுளின் எதிர்காலத் திட்டங்களும் இந்த திருவிவிலியத்தில் உள்ளது. எனவே தான் ஆண்டவரின் ஏட்டுச் சுருளை ஆய்ந்து படியுங்கள் (தேடி). எதுவுமே தனித்து விடப்படுவதில்லை. துணையின்றி எதுவும் இருப்பதில்லை. ஏனெனில் ஆண்டவரின் வாய்மொழிந்த கட்டளை இது. அவரது தூய ஆவியானவர் தான் இவற்றை ஒருங்கிணைத்திருக்கிறார் (எசா 34:16). கடவுளின் வார்த்தையின் மீது தாகம் இல்லாமல் அதை எத்தனை முறைப் படித்தாலும் அது புரியாத புதிராகவேயிருக்கும். எனவே தான் எழுத்தறிந்த ஒருவரிடம் இதைப் படியும் என்றால் என்னால் இயலாது. இது மூடி முத்திரையிடப்பட்டுள்ளதே என்பார். எழுத்தறியா ஒருவரிடம் ஏட்டுச் சுருகைக் கொடுத்து இதைப்படியும் என்றால் அவர் எனக்குப் படிக்கத் தெரியாதே என்பார் (எசா 29:11). இது எவ்வளவு உண்மை என்பதை எண்ணிப் பார்ப்போம். ஒவ்வொரு வார்த்தையும் கடவுளின் தூய ஆவியானவரால் மூடி முத்திரையிடப்பட்டுள்ளது. இன்றைக்கு திருப்பலி வாசகங்களை கேட்டு வாங்கி எல்லார் முன்பாக நின்று வாசிப்பதில் பெருமையைத் தேடுகிறார்கள். ஆனால் அந்த வார்த்தைகளைத் தங்கள் வாழ்வுக்கு எடுத்துக் கொள்வதில்லை. கடவுளின் வாழ்வளிக்கும் இந்த வார்த்தைகளைப் பகுத்துப் படிப்பது நல்லது. பழைய ஏற்பாட்டிற்கும் புதிய ஏற்பாட்டிற்கும் உள்ள வேறுபாடு அறிவது மிக அவசியம். பழைய ஏற்பாடு இஸ்ரயேல் மக்களுக்குக் கொடுக்கப்பட்டதாகும். ஆனால் புதிய ஏற்பாடு உலகில் உள்ள அனைத்து மனிதரும் மீட்புப் பெறும்படி கொடுக்கப்பட்டது. எனவேதான் நம் ஆண்டவர் முதலில் சீடர்களை அனுப்பும் போது பிற

இனத்தாரின் எப்பகுதிக்கும் செல்ல வேண்டாம். மாறாக வழி தவறிப் போன ஆடுகளான இஸ்ரயேல் மக்களிடமே செல்லுங்கள் என்றார் (மத் 10:5-6). ஆண்டவர் உயிர்த்தெழுந்த பின்பு நீங்கள் உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறை சாற்றுங்கள் என்றார் (மாற் 16:15). பழைய ஏற்பாட்டில் மிருகங்களின் இரத்தம் அவ்வப்போது மனிதரின் பாவங்களை நீக்கியது. ஆனால் புதிய ஏற்பாட்டில் ஆண்டவரின் விலையேறப்பட்ட இரத்தம் எந்த மனிதரையும் மன்னிப்பது மட்டுமல்ல. முற்றிலுமாக மீட்பை வழங்குகிறது (1 யோவா 1:7). பழைய ஏற்பாட்டில் திருச்சட்டப்படி பத்தில் ஒரு பங்கு காணிக்கை செலுத்த வேண்டும். ஆனால் புதிய ஏற்பாடில் எதிலும் எவ்வளவு என்று கணக்குப் பார்க்காமல் நம்மையே உயிருள்ள பலியாக செலுத்தவேண்டும் (உரோ 12:1-2) நம்முடைய வருவாயில் எத்தனைப் பங்கு கொடுப்பது என்ற சட்டம் இல்லை. ஒவ்வொருவரும் தம்முள் தீர்மானித்தபடியே கொடுக்கப்படும் மனவருத்தத்தோடோ கட்டாயத்தினாலோ கொடுக்க வேண்டாம். முக மலர்ச்சியோடு கொடுப்பவரே கடவுளின் அன்புக்கு உரியவர் (2 கொரி 9:7). புதிய ஏற்பாட்டில் நம்மால் இயன்ற அளவு தாரளமாக நம்முடைய ரத்தம் உள்பட கொடுக்க வேண்டும். பழைய ஏற்பாட்டிற்கும் புதிய ஏற்பாட்டிற்கும் உள்ள வேறுபாடு தெரியாததால் உலகப் போக்கிலான பல மூடப்பழக்கங்களுக்கு திருஅவை அடிமைப்பட்டுக் கிடக்கிறது. பழைய ஏற்பாட்டிற்கும் புதிய ஏற்பாட்டிற்கும் உள்ள வேறுபாட்டை யோவானின் சீடர்களுக்கு ஆண்டவர் விளக்கும்போது எவரும் பழைய ஆடையில் புதிய துணியை ஒட்டுப் போடுவதில்லை. ஏனெனில் அந்த ஒட்டு ஆடையைக் கிழிந்துவிடும். கிழிசலும் பெரிதாகும் என்றார்(மத் 9:16). ஏனெனில் நம் ஆண்டவர் திருச்சட்டத்தின் நிறைவாக இருக்கிறார்(உரோ 10:4). திருவிவிலிய வாக்குறுதிகள் அனைத்தும் நம் ஆண்டவரில் நிறைவேறுகிறது. எனவேதான் எதைச் சொன்னாலும் எதைச் செய்தாலும் அனைத்தையும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பெயரால் செய்து அவர் வழியாய் தந்தையாம் கடவுளுக்கு நன்றி செலுத்துங்கள் என்று கூறப்பட்டுள்ளது (கொலோ 3:17). இந்த உண்மையைத் தெளிவாக அறியும்போதும் அதைத் தெளிவாக அறிவிக்கும்போதும் அங்கே விடுதலை உண்டாகிறது (யோவா 8:32). ஏனெனில் கடவுளின் இந்த உயிருள்ள வார்த்தை மனிதனின் எண்ணங்களை மாற்றுகிறது. நீங்கள் அழியக் கூடிய வித்தினால் அல்ல மாறாக உயிருள்ளதும் நிலைத்திருப்பதுமான அழியா வித்தாகிய கடவுளின் வார்த்தையால் புதுப்பிறப்பு அடைந்துள்ளீர்கள் என்று பேதுரு குறிப்பிடுகிறார் (1பேது 1:23). எனவேதான் இந்த இறைவாக்குகளைப் படிப்போடும் இவற்றைக் கேட்போரும் இந்நூலில் எழுதியுள்ளவற்றைக் கடைப்பிடிப்போரும் பேறு பெற்றோர் என்று கூறப்பட்டுள்ளது (திவெ.1:3). முதலில் நன்றாகப் படிக்கவும் பின்பு அவைகளைக் கேட்கவும். அதன்பின்பு அதன்படி நடக்கவும் என்று கூறியுள்ளது. இதில் முதல் நிலையைச் சரியாகச் செய்யாததால் இந்த இறைவாக்குகளைக் கேட்கவும் அதன்படி நடக்கவும் அநேகருக்கு கடினமாக உள்ளது. எனவே தந்தையாம் கடவுள் அனைத்துக்கும் மேலாக மேன்மையுறச் செய்துள்ள இந்த அவரது வார்த்தைகளை (திபா 138:2) இந்த உயிருள்ள இறைவாக்குகளை ஒவ்வொரு நாளும் ஆர்வமாய் படிப்போம். மீட்பில் வளருவோம் பணிக்குடும்பம் முழுவதும் இந்த உண்மையை அறியச் செய்வோம் பேறு பெற்றோராய் வாழ்வோம்.

நற்பணி **ம.விசுவாசம்,** செஞ்சை.

மலைப்பொழிவு (மத் 5.6.7 அதிகாரங்கள்) இறையாட்சியைக் காண வகைசெய்யும் ஒப்பற்ற உண்மைகளை விளக்குவதோடு இறையாட்சியின் ஒழுக்க நெறிகளையும் எடுத்துக்காட்டுகிறது. இறைமக்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்கவேண்டும். அவர்களுடைய குணநலன்கள் (மத் 5:1-12), செயல்பாடுகள் (மத் 5:13-16), அருள் நெறிகள் (மத் 5:17-20), உள்ளான எண்ணங்கள் (மத் 5:21-28), கடமைகள் (மத் 6:1-18), நீதியான செயல்கள் (மத் 6:19-17:11), செய்ய வேண்டிய நன்மைகள் (மத் 7:12) செயல்படும் முறைகள் (மத் 7:13-23) என்பதையெல்லாம் பற்றி விவரித்த இயேசு ஆண்டவர் இறுதியாக அறிவாளி யார் என்பதைப் (மத் 7:24-27) பற்றிப் பேசுகிறார்.

இயேசு பேசிய அவருடைய வார்த்தைகளைக் கேட்டு இவற்றின்படி செயல்படுகிற எவரும் 'அறிவாளி' என்றும், அவருடைய வார்த்தைகளைக் கேட்டு இவற்றின்படி செயல்படாத எவரும் 'அறிவிலி' என்றும் கூறுகிறார். இந்த இருவகையான மனிதர்களையும் உற்றுக் கவனித்து உண்மை அறிந்து செயல்படுவோம். இயேசு கூறுகின்ற இருவகை மனிதர்களும் திருஅவையின் உறுப்பினர்கள். வாரந்தவறாமல் உற்சாகமாக கோவிலில் சென்று செபிப்பவர்கள். காணிக்கை கொடுப்பவர்கள். இறைவனை அறிந்ததாக எண்ணுபவர்கள். இறைவார்த்தைகளைக் கேட்டவர்கள். இருவகை மனிதர்களும் வீடுகட்ட வேண்டும் என்ற ஆசையுடையவர்கள். ஆகவே, இவர்கள் ஒரே நேரத்தில், ஒரே இடத்தில், ஒரே மாதிரியான வெளித்தோற்றமுடைய வீட்டைக் கட்டுகிறார்கள். அவைகள் அருகருகே உள்ள வீடுகளாகக் கூட இருக்கலாம். ஆனால், இந்த இருவகையான வீடுகளுக்குள் எளிதில் கண்டுபிடிக்க முடியாத ஒரு முக்கியமான வேறுபாடு காணப்படுகிறது. அது பூமிக்கு அடியில் வீட்டின் அடித்தளத்தில் இருக்கிறது. ஆபத்து நாளில்தான் அந்த வேறுபாடு வெளிப்படும்.

> இறைவார்த்தைகளைக் கேட்டு
> செயல்படுகிற எவரும் அறிவாளி (மத்7:24)

'அறிவாளி' என்று பாராட்டப்படுபவர் தன்னுடைய வீட்டின் வெளித்தோற்றத்தோடு வீட்டின் அடித்தளத்திற்கு அதிக முக்கியத்தவம் கொடுத்து பாறை மீது வீட்டைக் கட்டுகிறார்.

'அறிவிலி' என்று குற்றப்படுத்தப்படுபவர் தன்னுடைய வீட்டின் அடித்தளத்தைப் பற்றி அக்கறை கொள்ளாமல் வெளித்தோற்றத்திற்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுத்து மணல் மீது வீட்டைக் கட்டுகிறார்.

இங்கே, இரண்டு வகையான வீட்டிற்கும் ஒரே நேரத்தில் ஆபத்து வருகிறது. மழை பெய்தது. ஆறு பெருக்கெடுத்து ஓடியது. பெருங்காற்று வீசியது. அவை அவ்வீடுகளின் மீது மோதியது, பாறைமீது கட்டப்பட்ட வீட்டிற்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை. மணல் மீது கட்டப்பட்ட வீட்டிற்கோ பேரழிவு நேர்ந்தது. மணல் மீது வீட்டைக் கட்டியவரை அறிவு குறைவுள்ளவர் என்று எண்ணவிடக் கூடாது. ஒரு செயலை எப்படிச் செய்யவேண்டும் என்று அறிந்தவர்தான். ஆண்டவரே ஆண்டவரே என்று ஆர்வமாக அழைப்பவர்தான். ஆண்டவர் பெயரால் வல்ல செயல்களைச் செய்பவர்தான். ஆனாலும் பாறையாகிய ஆண்டவரின் மேல் 'கீழ்ப்படிதல்' என்ற அடித்தளம் போடவில்லை. ஆகவே, இந்த மேன்மையான கீழ்படிதல் இல்லாத அறிவிலியின் வீடு அழிந்தது (எபி 10:26-27). பாறையாகிய இயேசுவின்

வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிவதால் மட்டுமே நாம் பாதுகாப்புப் பெற முடியும். உண்மையை அறிந்திருந்தும் அவற்றின்படி செய்யாமல். மேலோட்டமாக அடித்தளம் போட்டால் போதும். பாறை வரை ஆழமாகத் தோண்ட வேண்டியதில்லை. மேலும். தான் வீடு கட்டும் பகுதியில் ஆறு பெருக்கெடுத்து ஓடுவதற்கு வாய்ப்பில்லை. தேவையற்ற செலவு செய்து ஆழத்தை நிரப்ப சிமிண்டையும் கல்லையும் ஏன் வீணடிக்க வேண்டும். வேலை செய்பவர்களுக்கு ஏன் கூடுதல் சம்பளம் கொடுக்க வேண்டும் என்று நினைத்து. பொறுப்பற்ற முறையில் செயல்படுகிறார். இயேசு ஆண்டவர் இவரை 'அறிவிலி' என்கிறார் ஆண்டவர். எசேக்கியேலிடம் (33:30,31) கூறுவதுபோல. உலகில் அநேக மக்கள் இறைவார்த்தைகளை வாசித்தும். அதன் விளக்க உரைகளைக் கேட்டும். அதன்படி செயல்படாத அறிவிலிகளாகத்தான் காணப்படுகிறார்கள். இறைவனுக்குப் பணிந்து நடக்க வேண்டும் என்ற உணர்வு அற்றவர்களாகவே இருக்கிறார்கள். 'இறைவார்த்தையைக் கேட்கிறவர்களாக மட்டும் இருந்து உங்களை ஏமாற்றிக் கொள்ள வேண்டாம். அதன்படி நடக்கிறவர்களாயும் இருங்கள்' என்று யாக்கோபு (1:22) எச்சரிக்கிறார்.

> இறைவார்த்தையைக் கேட்டு
> அதைக் கடைப்பிடிப்போர் பேறுபெற்றோர்
> (லூக் 11:28)

உலகில் நமக்குத் துன்பம் உண்டு. அவைகளைத் தவிர்க்க முடியாது. மழை எப்பொழுது வேண்டுமானாலும் வரலாம். திடீரென அதிகமாகவும் பெய்யலாம். உடனே நின்று போகலாம். பெருமழைக்குப் பின்புதான் ஆறு பெருக்கெடுத்து ஓடும். அதனைத் தொடர்ந்து. பெருங்காற்று வந்து பேரழிவுகளை உண்டாக்கும். இவையாவும் இயற்கையாக நடப்பதுபோலத் தோன்றினாலும். இவைகளின் பின்னணியில் சாத்தான் செயல்படுகிறான் (யோபு 1:19) என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். எதிரியாகிய அலகை கர்ச்சிக்கும் சிங்கம் போல யாரை விழுங்கலாமெனத் தேடித் திரிகிறது. பாறையாகிய இயேசுவை அடித்தளமாக கொண்டவரை எந்த ஆபத்தும் பாதிப்பதில்லை. சில வேளைகளில் கடவுளே நமக்குச் சில துன்பங்களை அனுமதிக்கிறார். அழியக்கூடிய பொன் நெருப்பினால் புடமிடப்படுகிறது. அதைவிட விலையுயர்ந்த உங்கள் நம்பிக்கை மெய்ப்பிக்கப்படவே துயருறுகிறீர்கள். இயேசு கிறிஸ்து வெளிப்படும் போது அந்நம்பிக்கை உங்களுக்குப் புகழும் மாண்பும் பெருமையும் தருவதாய் விளங்கும் (1 பேது 1:7) என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

ஆகவே. பாறையும் (1 கொரி 10:4). அடித்தளமும் (1 கொரி 3:11) 'வார்த்தையுமான (திவெ 19:13, யோவா 1:14) இயேசுவிடம் நம் வாழ்வை ஒப்புவிப்போம். எப்படிப்பட்ட பேராபத்துக்களைச் சந்திக்கவேண்டிய நிலை ஏற்பட்டாலும். கற்பாறையாகிய இயேசுவை அடித்தளமாகக் கொண்டிருக்கும்போது. எதுவும் நம்மைப் பாதிக்காது. பயப்பட வேண்டிய அவசியமும் இல்லை. இறைவார்த்தைகளைக் கேட்டு அதைக் கடைப்பிடிப்போர் அதிகம் பேறு பெற்றோர் (லூக் 11:28). இறை வார்த்தைகளைக் கேட்டு இவற்றின்படி செயல்படுகிற எவரும் பாறைமீது தம் வீட்டைக் கட்டிய அறிவாளிக்கு ஒப்பாவர் (மத் 7:24). நாமும் கடவுளுக்குப் பணிந்து அவரின் வார்த்தைகளைக் கேட்டு கடைபிடித்து பாறையின் மீது கட்டிய வீட்டைப் போல் என்றென்றும் அவரோடு இணைந்து நிலைத்திருப்போம்.

நற்பணி **ஆரோக்கியசாமி.ஜே**

'எந்நிலையிலும் நம்பிக்கை என்னும் கேடயத்தைப் பிடித்துக் கொள்ளுங்கள். அதைக் கொண்டு தீயோனின் தீக்கணைகளையெல்லாம் அணைத்து விட முடியும்' (எபே 6:16)

நிலை வாழ்வை வெற்றிவாகையாகச் சூடுவதை எதிர்நோக்கி இவ்வுலகில் பயணித்துக் கொண்டிருக்கின்ற நம்மை அலகை பல வகையான போராட்டங்களுக்கு உட்படுத்துகின்றான். அலகையை எதிர்த்து நின்று போராடி வெற்றி பெற ஆவிக்குரிய படைக்கலன்களை அணிந்து கொள்ள வேண்டிய கட்டாயத்திலிருக்கின்றோம். சென்ற ஏப்ரல் மாதத்திலிருந்து நம்பிக்கை என்னும் கேடயத்தைப் பற்றித் தியானித்து வருகின்றோம்.

நாம் கடவுள் மீது கொண்டிருக்கின்ற நம்பிக்கை என்னும் கேடயத்தை இறுகப் பற்றிக் கொண்டால்தான், இவ்வுலகையும், உலக கவர்ச்சிகளையும், தீமைகளை நல்லவை போன்று காட்டி நம்மை ஏமாற்றுகின்ற அலகையின் வஞ்சனைகளையும் எதிர்த்து நின்று வெற்றி கொள்ள முடியும். தீமையானவற்றை நமக்கு நன்மையானவை போலக் காட்டி நம்மை ஏமாற்றி வெற்றி காண்பதில் அலகை கைதேர்ந்தவன். அவனது ஏமாற்று வித்தைகளாகிய தீக்கணைகள் நம்மைத் தாக்காத வகையில் நாம் பாதுகாப்பாய் பிடித்துக் கொள்ள வேண்டியது நம்பிக்கை என்னும் கேடயம் தான்.

சென்ற மாதம் துன்பங்கள், எப்படி நாம் நம்பிக்கையில் நிலைத்திருப்பதற்கு நமக்குத் துணை செய்கின்றன என்று தியானித்தோம். கடவுள் யாரையும் சோதிப்பதில்லை. (யாக் 1:13) ஆனால், நமது நம்பிக்கையின் ஆற்றலைப் பரிசோதிக்கின்றார். விவிலியத்தில் ஆபிரகாம், யோபு இவர்களின் நம்பிக்கையைப் பரிசோதித்தார். அதற்குக் கடவுள் பயன்படுத்திய ஆயுதம் தான் துன்பங்கள். நாம் கடவுள் மீது கொண்டிருக்கின்ற நம்பிக்கையைப் பரிசோதிக்க நமக்கும் துன்பங்களை அனுமதிக்கிறார்.

தம்மிடம் நம்பிக்கை உண்டு எனச் சொல்லும் ஒருவர் அதை செயல்களில் காட்டாவிட்டால் அதனால் பயன் என்ன? அந்த நம்பிக்கை அவரை மீட்க முடியுமா?(யாக் 2:14) நம்மிடம் உள்ள நம்பிக்கை செயல் வடிவம் பெறும் போது தான் அது உயிருள்ளதாகின்றது. நமது செயல்கள்தான் நாம் கொண்டிருக்கும் நம்பிக்கைக்கு உயிர் கொடுக்கின்றது. நமக்கு வரும் துன்ப துயரங்களில் நாம் காட்டும் எதிர் வினைகள்தான் நமது நம்பிக்கையின் அளவுகோல்கள். நாம் நமக்கு வருகின்ற துன்பங்களைத் துயரங்களாக மாற்றி அல்லல் படுகிறோம். நமது துன்பங்களைத் துயரங்களாக மாற்றிக் கொள்வதன் மூலம் கடவுளின் உடன் இருப்பை பல வேளைகளில் மறந்து விடுகின்றோம். அப்போது நாம் கொண்டிருந்த நம்பிக்கையும் காணாமல் போய்விடுகிறது.

நம்பிக்கை என்னும் கேடயத்தை இறுகப் பற்றிக் கொண்ட அனுபவத்தால் தான் புனித பவுல் இப்படி கூறுகின்றார்.'கிறிஸ்துவின் அன்பில் இருந்து நம்மைப் பிரிக்கக் கூடியது எது? வேதனையா? நெருக்கடியா? இன்னலா? பட்டினியா? ஆடையின்மையா? இடரா? சாவா? எதுதான் நம்மைப் பிரிக்க முடியும்?' (உரோ8:35) வேதனை, நெருக்கடி, இன்னல், பட்டினி, ஆடையின்மை, இடர், சாவு இவை அனைத்தும் துன்பங்களின் சொந்தக்காரர்கள். இதில் ஏதாவது ஒன்று நமக்கு வந்தாலே துவண்டு போய் விடுகின்றோம். அதற்குக் காரணம் நம்முடைய நம்பிக்கை யின்மையே. புனித பவுல் கடவுள் மீது கொண்டிருந்த அசைக்க முடியாத நம்பிக்கையினால் எது வந்தாலும் என்னைக் கிறிஸ்துவின் அன்பில் இருந்து பிரிக்க முடியாது என்று உறுதியாகக் கூறியிருக்கின்றார். இதிலும் புனித பவுலின் பெருந்தன்மையை பார்க்கின்றோம். அவர் நம் மீது கொண்டிருந்த

நம்பிக்கையையும் பார்க்கின்றோம். தான் மட்டும் அப்படி இருந்தால் போதாது என்று எண்ணி கிறிஸ்துவின் அன்பில் இருந்து நம்மைப் பிரிக்க கூடியது எது என்று கூறி நம் ஒவ்வொருவரையும் சிந்திக்க நம்மையே நாம் பரிசோதித்துக் கொள்ள அழைப்பு விடுக்கிறார்.

ஆபிரகாமும் யோபுவும் தம் உள்ளத்தில் கொண்டிருந்த நம்பிக்கையினால் மட்டும் கடவுளுக்கு ஏற்புடையவர்கள் ஆகவில்லை. தாங்கள் கொண்டிருந்த நம்பிக்கையால் தங்களுக்கு ஏற்பட்ட துன்ப துயரங்களின் நடுவிலும் தன் செயல்களால் கடவுளுக்கு ஏற்புடையவர்களாக வாழ்ந்தனர். இவர்கள் ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன் வாழ்ந்து மறைந்தவர்கள். ஆனாலும் மறக்கப்படாத மனிதர்களாக இத்தனை ஆண்டுகள் கடந்தும் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம் அவர்கள் கொண்டிருந்த செயல் வடிவம் பெற்ற நம்பிக்கைதான்.

நமது துன்ப வேலைகளில் நாம் நமது நம்பிக்கை வாழ்வை எப்படி வெளிப்படுத்தி செயல்படுகின்றோம்? உலகமா? கடவுளா? என்று வரும்போது நமது நம்பிக்கை வாழ்வு இன்னும் பல வேளைகளில் உலகத்தின் பக்கம்தான் என்று கூறி செயல் வடிவம் பெறாது பேச்சளவிலேயே நின்று விடுகிறது. அதைப்பற்றிய கவலையோ அக்கறையோ இன்றி வெளிவேடமான பேச்சும் செயலும் நம்மிடம் ஒட்டிக் கொண்டிருக்கின்றது. எனவே, நாம் எதிர்நோக்கி இருக்கும் விண்ணகமாட்சிக்குள் நம்மைக் கரம் பிடித்து அழைத்துச் செல்வது நமது நம்பிக்கைதான் என்பதை ஆழமாய் உணர்வோம்.

நற்பணி **ச.சகாயராணி**, இராம்நகர்.

## வானவில்

கடவுள். "எனக்கும் உங்களுக்கும் உங்களுடன் இருக்கும் உயிருள்ள எல்லாவற்றிற்குமிடையே தலைமுறைதோறும் என்றென்றும் இருக்கும்படி நான் ஏற்படுத்திய உடன்படிக்கையின் அடையாளமாக, என் வில்லை மேகத்தின்மேல் வைக்கிறேன். எனக்கும் மண்ணுலகுக்கும் இடையே உடன்படிக்கையின் அடையாளமாக இது இருக்கட்டும் (தொநூ 9:12,13).

சிறுவர் முதல் பெரியவர் வரை வானவில்லைக் காணும்போது இனம்புரியாத குதுகலம் மனதிற்குள் வந்து உட்கார்ந்து கொள்ளும். வானவில் கடவுள் அனைத்து உயிர்களுக்கிடையில் செய்து கொண்ட உடன்படிக்கையை நினைவுபடுத்துகின்றது. இந்த உடன்படிக்கை மற்ற போர்களுக்குப் பின் ஏற்படுத்தப்படுவது போலல்லாமல் உண்மையான அன்பால் ஏற்பட்டது. நாம் கேட்காமல் அவர் நம்மீது கொண்ட அளப்பரிய அன்பால் உருவாக்கியது. ஒவ்வொருமுறை அதைப் பார்க்கும்போதும் கடவுளின் வல்லமையையும், அன்பையும், உண்மையையும் அது பறைசாற்றுகிறது.

கடவுள் தனது உடன்படிக்கையை மறக்காமல் அவரது அரியணையில் இந்த வானவில்லை வைத்திருக்கின்றார். "அவரது தோற்றம் படிகக்கல் போலும் மாணிக்கம் போலும் இருந்தது. மரகதம் போன்ற வானவில் அந்த அரியணையைச் சூழ்ந்திருந்தது (திவெ 4:3). இந்த வானவில் எதற்கெல்லாம் அடையாளமாக உள்ளது என்று பார்ப்போம்.

**1. உடன்படிக்கை :** மனிதர்களின் பாவநிலையக் கண்டு அவர்கள் மீது கோபம் கொண்டு தண்டித்த இறைவன் அவரின் பேரிரக்கத்தினால் அவர்களின் வருந்தத்தக்க நிலையைக் கண்டு ஒரு உடன்படிக்கை செய்கிறார். "அவரது சினம் ஒரு நொடிப் பொழுதுதான் இருக்கும். அவரது கருணையோ வாழ்நாள் முழுதும்

நீடிக்கும். மாலையில் அழுகை காலையிலோ ஆர்ப்பரிப்பு (திபா 30:5). எனவே வானவில் உடன்படிக்கையின் அடையாளமாகவுள்ளது.

**2. ஒற்றுமை :** வானவில் பல நிறங்களில் இருப்பது பால மனிதர்களும் பல குணங்களையும் நிறங்களையும் கொண்டவர்களாக உள்ளனர். எதை வைத்து அவர்கள் பிரிந்திருந்தாலும், இனி உங்களிடையே யூதர் என்றும் கிரேக்கர் என்றும், அடிமைகள் என்றும் உரிமைக் குடிமக்கள் என்றும் இல்லை. ஆண் என்றும் பெண் என்றும் வேறுபாடு இல்லை. கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள நீங்கள் யாவரும் ஒன்றாய் இருக்கிறீர்கள் (கலா 3:28) என்று ஒன்றாக இணைந்து வானவில்லைப்போல கடவுளின் நீதிக்கு வளைந்து வணங்கினாலே உலகிற்கு மீட்பு என்பதற்கு வானவில் அடையாளமாக உள்ளது.

**3. ஏகம் :** வெளியில் பார்க்கும்போது வானவில் 7 நிறங்களாகத் தோன்றினாலும் அதன் மூலம் ஒன்றே. வெண்மையான ஒளி நீர் துளிகளில் பட்டு நிறப்பிரிகை அடையும் போது வானவில் தோன்றுகிறது. அது போல நாம் அனைவருக்கும் மூலம் ஒன்றே இந்த பூமியில் வாழும் போது பிரிந்திருக்கிறோம். ஆனால் நாம் வந்த இடமும் போகும் இடமும் ஒன்றே நம்மை அனுப்பியவர் ஒருவரே. ஒளியின் பிறப்பிடமான அவரில் இருந்து பிரிந்து வந்தவர்களே நாம் என்பதை "நல்ல கொடைகள் அனைத்தும், நிறைவான வரமெல்லாம், ஒளியின் பிறப்பிடமான விண்ணகத் தந்தையிடமிருந்தே வருகின்றன (யாக் 1:17)" என்பதற்கு வானவில்லே அடையாளம்.

**4. நீதி :** பூவுலகைக் காக்க தன் மகனையே பூமிக்கு அனுப்பும் அளவுக்கு அன்பு வைத்திருந்தாலும் பொல்லாரைத் தண்டிப்பதில் ஆண்டவர் நீதி தவறுவதில்லை. "ஆண்டவர் நேர்மையை விரும்புகின்றார். தம் அன்பரை அவர் கைவிடுவதில்லை. அவர்களை என்றும் பாதுகாப்பார். பொல்லாரின் மரபினரோ வேரறுக்கப்படுவர் (திபா 37:28) உலகம் முழுக்க பாவம் பெருகினாலும் முழுவதையும் அழிக்க நினைத்தாலும் தம் அன்பர்களை அவர் கைவிடுவதில்லை என்பதற்கு வானவில் அடையாளம்.

**5. கருணை :** மனிதர்களை மட்டுமின்றி அனைத்து உயிர்களையும் காக்கும் இறைவன் பேரழிவுக்குப்பின் மனம் வருந்தி உலகின் மீது கருணை கொண்டார். பொங்கியெழும் சீற்றத்தால் இமைப்பொழுதே என் முகத்தை உனக்கு மறைத்தேன். ஆயினும் என்றுமுள்ள பேரன்பால் உனக்கு இரக்கம் காட்டுவேன். (எசா 54:8). இமைப்பொழுது அவர் கோபம் கொண்டாலும் அவர் கருணை என்றும் உள்ளது என்பதற்கு வானவில்லே அடையாளம்.

வானவில் எதிர்நோக்குக் கூடுகையை கொண்டாடிய நாம் "மலைகள் நிலை சாயினும் குன்றுகள் இடம் பெயரினும் உன் மீது நான் கொண்ட பேரன்போ நிலை சாயாது. என் சமாதான உடன்படிக்கையோ அசைவுறாது என்கிறார் உனக்கு இரக்கம் காட்டும் ஆண்டவர் (எசாயா 54:10) என்பதை மனதில் வைத்து எத்தகைய துன்பம் வந்தாலும் நமக்கு இரக்கம் காட்டும் ஆண்டவரின் உடன்படிக்கையும் அன்பும் மாறாது என்று நம்புவோம். "நோவா பேழையைச் செய்து கொண்டிருந்த நாள்களில் பொறுமையோடு காத்துக் கொண்டிருந்த கடவுளை அந்த ஆவிகள் ஏற்றுக்கொள்ளவில்லை. எட்டுபேர் மட்டும் பேழையில் தண்ணீர் வழியாகக் காப்பாற்றப்பட்டனர். (1 பேதுரு 3:20)", அது போல இந்த உலகம் அவரின் வருகைக்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கும்போது அவரை ஏற்றுக்கொள்ளாத ஆவிகளை மீட்டெடுத்து பணியாளர்களாகிய நாமும் தூய ஆவியாரின் வழிகாட்டுதலில் இறைமகன் இயேசு கிறிஸ்துவின் வழியில் வான்வீட்டிற்கு தகுதியநடைய எதிர்நோக்கோடு வாழ்வோம்.

நற்பணி **ஜஸ்டின்,** பாம்பன்

## இது சாத்தியமா ?

சிலருக்கு தன்னைவிட உயர் பதவியில் இருப்பவரைப் பார்த்தால் அச்சம்! சிலருக்கு தீயன செய்வோரைப் பார்த்தால் அச்சம்! அநீதியை எதிர்த்துப் போராட அச்சம்! நோய் எதுவும் வந்து விடுமோ என்ற அச்சம்! மகனின் எதிர்க காலம் குறித்த கவலையோடு கூடிய அச்சம்! பேய் என்றால் அச்சம்! இருட்டு என்றால் அச்சம்! எதற்குமே அஞ்சாத ஒரு இளைஞனின் கதை இது. அந்த இளைஞன் அந்த ஊரில் எதற்குமே அஞ்சாதவன்.

ஒருமுறை பக்கத்து ஊர்க்காரர் ஒருவர் சவாலிட்டுச்சொன்னார் அந்த இளைஞனிடம். 'நீ இன்று இரவு 12 மணிக்கு அந்த பனந்தோப்புக்கு சென்று ஒரு குறிப்பிட்ட பனை மரத்தின் அடிப்பகுதியில் ஒரு ஆணியை அடித்து விட்டு வர வேண்டும். கையில் சுத்தியல், ஆணியை தவிர வேறு எந்த பொருளும் எடுத்துச் செல்லக்கூடாது. போட்டிக்கு ஒத்துக்கொண்ட இளைஞன் மறுநாள் காலையில் அப்பனைமரத்தின் அடியில் பிணமாய் கிடந்ததைப் பார்த்து மக்கள் அதிர்ச்சி அடைந்தனர். பனைமரத்துப் பேய் அவனைச் சாகடித்து இருக்குமோ!? என்று ஐயப்பட்டனர்.

ஆனால் நடந்தது இதுதான்! அவன் பனை மரத்தின் அடியில் ஆணி அடிக்கும்போது இருட்டாக இருந்ததால், காற்றின் வேகத்தில் வேட்டியின் நுனியையும் சேர்த்து அடித்து விட்டான். எழும்போது வேட்டி சிக்கிக் கொண்டு வாரிவிட்டு கீழே விழுந்தான். இதை அறியாத இளைஞன் பேய் தான் தன்னைத் தடுமாறச் செய்தது என்று எண்ணி அச்சத்திலே உறைந்தவன் இறந்தே போனான். இதை கிராம மக்கள் மறுநாள் தான் கண்டுபிடித்தனர்.

விவிலியத்தில் அஞ்சாதே என்ற வார்த்தை 366 முறை இருப்பதாக கேள்விப்பட்டிருக்கிறேன். எலிசா தம் வாழ்நாளில் எந்த தலைவருக்கும் அஞ்சவில்லை; அவரை அடிபணிய வைக்க எவராலும் முடியவில்லை (சீரா 48: 12). இந்த இறை வார்த்தைகளை மனதின் ஆழத்திற்கு கொண்டு செல்லும்போது ஆன்மாவை கொள்பவர் தவிர உடலை கொள்பவருக்கு அஞ்சாமல் (மத். 10: 28) அண்ணல் இயேசுவின் அருள்கரத்தோடு அஞ்சாமல் வாழ்வது சாத்தியம் தானே!

-நற்பணி **J. அருன் இளங்கோ** இராம் நகர்.

**வித்தியாசமான எண்களும் அத்தியாவசியமான இறைவார்த்தைகளும்**

| | |
|---|---|
| நீங்கள் ஒரே எதிர்நோக்கு கொண்டு வாழ அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். ஒரே எதிர்நோக்கு இருப்பது போல, உடலும் ஒன்றே; தூய ஆவியும் ஒன்றே. | **எபேசியர் 4:4** |

ஒரு அருட்தந்தையிடம் ஒரு சிறுவன் தனது சந்தேகத்தைக் கேட்டான் 'ஃபாதர் விண்ணகத்திற்குச் செல்வது ரொம்ப கஷ்டமா? ஃபாதர்' பதில் கூறினார் 'இல்லவே இல்லை. நரகத்துக்குப் போவதுதான் கஷ்டப்படணும். சிகரெட் குடிக்க பணம் வேணும். போதைப் பழக்கங்களுக்கு பணம் வேணும். ஆடம்பர வாழ்க்கைக்குப் பணம் சம்பாரிக்கணும். அடுத்தவனைக் கெடுக்க உயிரைப் பணயம் வைக்கணும். தவறு செய்ய மூளையைக் கசக்கிக் கொண்டு யோசிக்கணும். இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம் தம்பி. ஆனா மோட்சத்துக்குப் போறது ஈஸி. அன்பு செலுத்த. கடவுளை அறிய. இறை அன்பில் வாழ. இயற்கையை நேசிக்க. பண்புடன் வாழ. மனிதநேயம் காட்ட.. கனிவுடன் நடக்க. நல்லதை நினைக்க. சமாதனமாய் வாழ என்று இதெல்லாம் ரொம்ப ஈஸி தம்பி. ஆனால் ஏனோ மக்கள் ஈஸியான நன்மையைப் பின்னுக்குத் தள்ளி கெட்டதையே உயர்த்திப் பிடித்து வாழ்ந்து நரகத்திற்கு சென்று விடுகிறார்கள். நீ எப்படி வாழப்போற தம்பி?' என்று கேட்டு அவனை யோசிக்க வைத்தார் (காதில் விழுந்த கதை) எதிர்நோக்கே இல்லாது மனம் போன போக்கில் வாழ்வதும் எதிர்நோக்கில் நிலைப்பாடு இல்லா தன்மைகளும் தடைகளே. தடைகளை தாண்டிச் செல்வது எப்படி?

'உங்களுள் எவரும் கடவுளின் அருளை இழந்து விடாமலிருக்கப் பார்த்துக் கொள்ளுங்கள். கசப்பான நச்சு வேர் எதுவும் உங்களுக்குள் முளைத்து தொல்லை கொடுக்காதபடியும் அதனால் பலர் கெட்டுப் போகாதபடிப் பார்த்துக் கொள்ளுங்கள்' (திப12:15) எதிர்நோக்கில் தடுமாற்றம் ஏன் வருகிறது? எதிர்நோக்கி இருப்பதில் உறுதிப்பாடற்ற நிலை ஏன்? தளர்ச்சி ஏன்? குன்றா எதிர்நோக்கும் தளரா நம்பிக்கையும் தடம்புரண்டு போவது எதனால்? எதிர்நோக்கின் திருப்பயணிகளாகிய நாம் நம்மையே சற்று நமக்குள் பயணித்து தெரிந்து கொள்வோம். அதற்கு நற்செய்தியில் வலம்வரும் திருத்தூதர்களும் விவிலியமாந்தர்களும் நம்மோடு பயணித்து வழிகாட்டட்டும். தூய ஆவியாரின் வழிகாட்டுதலில் அவரின் துணையுடன் தியானிக்கப் புறப்படுவோம்.

**தடைகள் ஏன்?:**

அந்த பத்துப்பெண்களின் எதிர்நோக்கும் ஒரே மையத்தை நோக்கித்தான். மணமகனை எதிர்கொள்ள வேண்டும். அவர் எப்போது வருவார் என்று யாருக்கும் தெரியாது வருவார் அவருடன் திருமண மண்டபத்திற்குள் போவோம் என்பதே அவர்களின் எதிர்நோக்கு. பத்துப்பேர் கைகளிலும் விளக்குகள் விளக்குகள் ஒளிர்ந்து பிரகாசித்துக் கொண்டிருக்க மணமகன் வரத் தாமதமாகிக் கொண்டே போகிறது. தூக்கம் கண்களைச் சுழற்ற அனைவருமே உறக்கத்தில் ஆழ்ந்து போயினர்.

நள்ளிரவு... 'இதோ மணமகன் வருகிறார். அவரை எதிர்கொள்ள வாருங்கள்' என்ற உரத்தகுரலின் அதிர்வில் அனைவரும் எழுந்து விளக்குகளை சரி செய்து எரியவிட்டனர். அதில் புத்திசாலிப் பெண்களாகிய ஐவர் விளக்குகளுடன் கலங்களில் எண்ணெயும் எடுத்து சென்றிருந்ததால் பதட்டமின்றி விளக்குகளை ஒழுங்குபடுத்த அறிவிலிப் பெண்கள் ஐவரோ தங்கள் விளக்குகள் அணைவதைக் கண்டு பதட்டத்தோடு 'எங்கள் விளக்குகள் அணைந்து கொண்டிருக்கின்றன. உங்கள் எண்ணெயில் எங்களுக்கும் கொடுங்கள்' என்று கேட்க முன்மதியுடைய ஐவர் குழு 'நாங்கள் கொடுத்தால் நம் அனைவருக்குமே போதுமானதாக இருக்காது. எனவே நீங்கள் வணிகரிடம் போய் வாங்கிக் கொள்ளுங்கள்' என்று சொல்ல அவர்கள் வாங்க

புறப்பட்டு செல்லும்போது மணமகன் வர எதிர்நோக்கில் ஆயத்தமாயிருந்த ஐவர் மணமகளோடு திருமண மண்டபத்துக்குள் புகுந்தனர். கதவு திறக்காதபடி அடைக்கப்பட அதன் பிறகு அறிவிலிகளான ஐந்து பெண்களும் 'ஐயா ஐயா ' என்று கத்திய போதும் அடைத்த கதவு அடைத்தே போய்விட்டது. உள்ளிருந்து 'விழிப்பாயிருங்கள்; ஏனெனில் அவர் வரும் நாளோ உங்களுக்குத் தெரியாது' என்ற மணமகனின குரல் மட்டும் கேட்டது என்பதை மத்தேயு நற்செய்தி பத்து தோழியர் உவமையில் விளக்கமாக காணலாம் (மத் 25.1-13).

முன்மதியுள்ள பெண்கள் அப்படி என்ன செய்து கடவுளின் பிரசன்னத்திற்குள் சென்றார்கள்? 'அசையாத அடித்தளமுள்ள ஒரு நகரை எதிர்நோக்கி ' (எபி. 11:10) இருப்போர் உறுதியாக கடவுளை அறிந்தவர்களாகவும் அவரின் அழைப்பின் மேன்மையை உணர்ந்தவர்களாகவும் ஆயத்த நிலையில் எப்போதும் இருப்பார்கள். அவர்களின் எதிர்நோக்கு விண்ணக பேரின்பத்தை மட்டுமே நாடக்கூடியதாக இருக்கும். அவர்களின் ஆன்மா தூய்மையில் ஒளிர்ந்து கொண்டிருக்க அவர்கள் செய்த நற்செயல்கள் என்கிற கலங்கள் தூய ஆவியாரால் நிரப்பப்பட்டு எந்த நேரத்திலும் இறைவனிடத்தில் செல்ல தயார்நிலையில் இருந்ததால் அவர்கள் மணமகனாம் கிறிஸ்துவின் மகிழ்வில் பங்கேற்றனர்.

ஆனால் அறிவிலிகளாக பெண்களோ ஆண்டவரைப் பற்றி முழுமையாக அறியாதவர்களாய் அவரின் அழைப்பின் மகத்துவம் பற்றிய அலட்சியம் நிறைந்தவர்களாய் இருந்ததைக் காண முடிகிறது. அந்த நேர பக்தி அந்த நேர வழிபாடு என்று இருந்து விட்டு நற்செயல்கள் என்கிற கலங்களைக் கொண்டு செல்லாமல் இருந்தவர்களாகவும் உறக்க நிலையில் இருந்ததே தடையாகிப் போனது. 'நம் ஆண்டவர் இயேசு வல்லமையுள்ள வானதூதரோடு வானிலிருந்து வெளிப்படும் போது இப்படி நிகழும். அப்பொழுது அவர் தீப்பிழம்பின் நடுவே தோன்றி கடவுளை அறியாதவர்களையும் நம் ஆண்டவர் இயேசுவைப்பற்றிய நற்செய்தியை ஏற்காதவர்களையும் தண்டிப்பார். இவர்கள் ஆண்டவரின் சீர்மிகு மாட்சியைக் காண இயலாது' (2 தெச 1: 7. 8. 9)என்கிற வார்த்தை இவர்களுக்குப் பொருந்துகிறது.

மற்றுமொரு முன்மதி கேரக்டர் லூக்கா நற்செய்தியில் ... குறுக்கு மறுக்கு முன்மதி கொண்ட இவர் வீட்டுப் பொறுப்பாளர் . தலைவரின் உடைமைகளைப் பாழாக்கியவர். அது மட்டுமல்ல தலைவருக்கு விஷயம் தெரியவந்ததுமே அவரது மூளை ஸ்மார்ட்டாக செயல்படுகிறது. உடல் உழைப்பை விரும்பாத அவர் தலைவரிடம் கடன் வாங்கியவர்களின் ஆதரவைப்பெறும் பொருட்டு அதிக கடனைக் குறைத்து எழுதி மேலும் தலைவரின் உடைமையைப் பாழாக்குகிறார். கடன் வாங்கியவர்களையும் தவறுக்கு உட்பட வைக்கிறார். 'தங்கள் நலனில் மட்டுமே கருத்தாய் இருப்பவர்கள் காற்றால் அடித்துச் செல்லப்படும் நீரற்ற மேகங்கள். கனிதரும் காலத்தில் கனிதராமல், பின்னர் வேரோடு பிடுங்கப்படும் மரங்களைப் போல இருமுறை செத்தவர்கள் ' (யூதா 12 ) என்ற வார்த்தையை இவர்களுக்குப் பொருத்திப் பார்க்கலாம். இத்தகையோர் மிக ஆபாயமானவர்கள். நம்ம தலைவர் மனித உள்ளங்களை ஆய்ந்து அறிய வல்லவரல்லவா? பாராட்டுவது மாதிரி பாராட்டி விட்டு இவ்வுலகில் தானே உன் புத்திசாலித்தனம். விண்ணக ஒளியில் நீ பங்கு பெற முடியாது என்பதை மறைமுகமாகக் உவமையாய் காண்பித்துக் நமக்கு விளக்குகிறார் நம் தெய்வம். முன்மதியுள்ள வீட்டுப் பொறுப்பாளரின் அனைத்து செயல்பாடுகளுமே அவருக்கு விண்வாழ்விற்கு தடைக்கு மேல் தடைதான். மண்சார்ந்ததை நாடாமல் விண்சார்ந்ததை நாடுவோரின் எதிர்நோக்கு மட்டுமே மனிதர்களை இறைபதம் கொண்டு போய் சேர்க்கும்.

நாம் உலகின் மக்களல்ல: ஒளியின் மக்கள். நம் பணிவாழ்விற்கும் உடலாகிய கடவுள் தங்கும் ஆலயம் குறித்தும் கணக்கு கொடுக்க வேண்டிய பொறுப்பு நமக்கு உண்டு என்பதை உணர்வோம். தலைவராம் நம் கடவுளின் உடைமைகளான இயற்கையை காக்க வேண்டிய கடமையுள்ளவர்கள். தலித் மக்களின் உரிமைக்காக குரல் கொடுக்க வேண்டியவர்கள். குழந்தைகளின் பாதுகாப்பிற்காக விழிப்புணர்வு தர வேண்டியவர்கள். இன்னும் இளையோருக்கு முன்மாதிரிகை காட்டி, முதியோரை மதித்து, சமயநல்லிணக்கத்தைக் காக்கும் பொறுப்பு என்று பல்வகை பொறுப்புகள் நம் தோள்களில் ... ஆனால் தாமதம் ஏன்? தடைகள் ? கேள்விகள் கேட்டு பதிலைத் தேடி கண்டுபிடிப்போம்.

**தடைகள் உடைபட:**

அசையாத அடித்தளமுள்ள ஒரு நகரை விண்ணக தாய்வீட்டை எதிர்நோக்கியிருக்கும் நாம் 'எதிர்நோக்கு இல்லாத மற்றவர்களைப் போல் துயருறக்கூடாது' (1 தெச 4:13) என்பதை அறிந்திருக்க வேண்டும் என்பதை அலோசனையாகக் கொடுக்கிறார் திருத்தூதர் புனித பவுல் (4:13). ஏனெனில் நம் இயேசு ஆண்டவரின் மகிழ்ச்சி நமக்குள் நிறைந்து இருக்கவும் நம் மகிழ்ச்சி அவரில் நிறைவு பெறவுமே நம்மை சிறப்பாக தேர்ந்தெடுத்து அழைத்திருக்கிறார். திருத்தூதர்களுக்கு ஏற்பட்ட அனைத்து நெருக்கடிகள், துன்ப துயரங்கள், வேதனைகள் மத்தியிலும் தடைகளை உடைத்து இறையாட்சிப் பணியினை தூய ஆவியாரின் வழிநடத்துதலில் சிறப்பாகச் செய்து தங்கள் வாழ்வை கடவுளுக்கு அர்ப்பணித்த விதத்தை மனதில் இருத்துவோம். எதிர்க்க எதிர்க்க எழுச்சி பெற்ற அவர்களின் பணி வாழ்வு நமக்கு வழிகாட்டுவதைப் பிடித்துக் கொள்வோம். 'நீங்கள் ஒளிபெற்ற பின் உங்களுக்கு நேரிட்ட துன்பம் நிறைந்த போராட்டத்தை மனவுறுதியோடு ஏற்றுக் கொண்டீர்கள். சில வேளைகளில் நீங்கள் இகழ்ச்சிக்கும் வேதனைக்கும் ஆளாகி வேடிக்கைப் பொருளானீர்கள்' (எபி. 10:32,33) ஆயினும் இந்த தடைகள் உடைபடும் அளவுக்கு குன்றா எதிர்நோக்கு இருந்தால்... ' நம்மிடமுள்ள துணிவை கைவிடாமல் இருந்தால்... அதற்கு மிகுந்த கைம்மாறு உண்டு' (எபி 10:35) என்கிற உத்திரவாதத்தை அளிக்கிறது எபிரேயர் திருமுகம். துன்பம், மானக்கேடு என்கிற உலையிலிட்டு உருக்கி உறுதிப்படுத்தி நிலைநிறுத்தியிருக்கிறார் நம் தெய்வம்.

பணி வாழ்வில் 'துணிவையும் எதிர்நோக்கோடு கூடிய பெருமையையும் நாம் உறுதியாகப் பற்றிக் கொண்டால் கடவுளுடைய குடும்பத்தாராய் இருப்போம்' (எபி 3:6) எந்நிலையிலும் உடைபடா தன்மை கொண்டு எதிர்நோக்கில் துணிவு திடநம்பிக்கை இருந்தால் கடவுளின் குடும்பத்தில் நாமும் உறவுகளாய் இணைந்து கொள்ளலாம் அல்லவா? அந்த எதிர்நோக்கே நமக்கு பாதுகாப்பான உறுதியான நங்கூரமாகிப் போகுமே.

'அமைதி, சகோதரத்துவம் மற்றும் ஒற்றுமையின் எதிர்காலத்தை உருவாக்க அனைத்து மதங்களின் நம்பிக்கையாளர்களும் ஒன்றிணைய வேண்டும்' என்று அழைப்பு விடுத்ததோடு நமது திருத்தந்தை லியோ அவர்கள் 'உரையாடலின் பாதையும் நட்பின் பாதையும் சவாலானதாக இருக்கலாம். ஆனால் அவையே அமைதியின் விலை மதிப்பில்லா நல்ல பலன்களின் அறிகுறியாகும். 'ஒன்றுகூடலே 'நம்பிக்கை மற்றும் ஒற்றுமையின் நல்ல பலன்களைத் தரும்' என்று கேட்டுக் கொள்கிறார். பொது நன்மையில் அக்கறை கொண்டு விண்ணக எதிர்நோக்கில் உறுதியாக இருந்து இணைந்து பயணிக்கும் திரு அவையாக நம்பிக்கையோடும் துணிவோடும் ஏற்றம் மிகு எதிர்நோக்கோடும் நம் பணியை தொடர்ந்தாற்றுவோம்.

நற்பணி **ஜெஸி. P.**

## அக்டோபர் 2025 நற்செய்திப் பணிக்குழு பணித்திட்டம்

| நாள் | நிகழ்வு | இடம் |
|---|---|---|
| 01.10.25 | அருளமுது ஆதாரக்குழு கூடுகை | அமைதியகம். காயாவயல்.<br>அருள்சான்று நிலையம். பரமக்குடி |
| 4.10.25 | பரிந்துரை செபம் | திரு இருதய ஆண்டவர் திருத்தலம் |
| 5.10.25 | மறைமாவட்டத் திருப்பயணம் | ஓரியூர் |
| 5.10.25 | புதிய பணியாளர்கள் பயிற்சி | புதுக்கோட்டை. கோட்டைக்காடு தஞ்சை மறைமாவட்டம் |
| 10.11 & 12.10.25 | சிறப்புக் களப்பணி பயிற்சி | குள்ளம்பாடி.கும்பகோணம் மறைமாவட்டம் |
| 11.10.25 | புதிய பணியாளர்கள் பயிற்சி | புனித குழந்தை தெரசாள் கோவில். தங்கச்சிமடம் |
| 12.10.25 | புதிய பணியாளர்கள் பயிற்சி | அருள்சான்று நிலையம். பரமக்குடி. காளையார்கோவில்<br>புனித செபமாலை அன்னை கோவில். இராமநாதபுரம்<br>வியான்னி அருள்பணி மையம். சிவகங்கை<br>புனித அருளானந்தர் கோவில். ஓரியூர்<br>உலக இரட்சகர் கோவில். பட்டுக்கோட்டை<br>புனித மரியன்னை கோவில். பூதலூர் |
| 12.10.25 | தொடர் களப்பணி | எழுவன்கோட்டை கிராமம். இராம்நகர் பங்கு<br>பூரண மாங்கலம் கிராமம். சாயல்குடி. நானாக்குடி பங்கு |
| 10.11 & 12.10.25 | ஆண்டுத்தியானம் IV | அமல அன்னை அமைதியம். காயாவயல் |
| 17.18 & 19.10.25 | ஆண்டுத்தியானம் V | அருள்சான்று நிலையம். பாரமக்குடி |
| 19.10.25 | புதிய பணியாளர்கள் பயிற்சி | அமல அன்னை அமைதியம். காயாவயல்<br>புனித ஆரோக்கிய அன்னை கோவில். சாயல்குடி<br>புனித பேதுரு கோவில். சி.கே. மாங்கலம்<br>புனித லூர்து அன்னை கோவில். அம்மாபேட்டை<br>புனித அடைக்கல அன்னை கோவில். திருமயம் |
| 24.25 & 26.10.25 | ஆண்டுத்தியானம் VI | அமல அன்னை அமைதியம். காயாவயல் |
| 26.10.25 | தொடர்களப்பணி | பொருமாள்குரும்பன்பட்டி. கமுதி பங்கு |
| 26.10.25 | புதிய பணியாளர்கள் பயிற்சி | புனித பாத்திமா அன்னை கோவில். திருவாரூர்<br>புனித குழந்தை இயேசு கோவில். நமணசமுத்திரம்<br>தூய ஆவியார் கோவில். இராஜசிங்க மாங்கலம் |
| 01.11.25 | யூபிலி ஆண்டு நம்பிக்கை நடைபயணம் | இடைக்காட்டூர். |

**இப்ப இல்லாட்டி எப்ப ?**

-எல்லாரோ

வாழ்க்கை மிகக் **குறுகியது.**

ஆனால் அதன் தடங்களின் ஆயுளோ **மிக அதிகம்.**

**இதை நாம் உணர்வது இப்ப இல்லாட்டி எப்ப?**

நல்வாழ்க்கை சில நாள்களே நீடிக்கும்:
நற்பெயர் என்றென்றும் நிலைக்கும். (சீராக் 41:13)

## புதிய பணியாளர்கள் பயிற்சி

| நாள் | மையம் | வழிநடத்துபவர்கள் |
|---|---|---|
| 11.10.25 | புனித குழந்தை தெரசாள் கோவில், தங்கச்சிமடம் | நற்பணி M. மரியகிரகோரி<br>நற்பணி X. லூர்துமேரி |
| 12.10.25 | அருள்சான்று நிலையம் பரமக்குடி | நற்பணி J. மேரி புஷ்பம்<br>நற்பணி A. பிரான்சிஸ் சேவியர் |
| 12.10.25 | தந்தை ஜோசப் சேவியர் அரங்கம், காளையார்கோவில் | நற்பணி K. ஜஸ்டின்கபிரியேல்<br>நற்பணி V. செங்கோல்மேரி |
| 12.10.25 | புனித செபமாலை அன்னை கோவில், இராமநாதபுரம் | நற்பணி S. ஆரோக்கியசாமி<br>நற்பணி S. இராஜேந்திரன் |
| 12.10.25 | வியான்னி அருள்பணிமையம் சிவகங்கை | நற்பணி M. சகாயமேரி<br>நற்பணி A. யூஜின் அமல்ராஜ் |
| 12.10.25 | புனித அருளானந்தர் திருத்தலம், ஓரியூர் | நற்பணி S. சகாயராணி<br>நற்பணி A. ஜான்சிமேரி<br>நற்பணி இரா. அருள்பிரகாசம் |
| 19.10.25 | அமலஅன்னை அமைதியகம் காயாவயல் | நற்பணி M. மரியகிரகோரி<br>Sr. செலின் பிரபா |
| 19.10.25 | புனித ஆரோக்கிய அன்னை கோவில், சாயல்குடி | நற்பணி G.M.S. ராணி<br>நற்பணி J. சார்லஸ் |
| 19.10.25 | புனித பேதுரு கோவில் சி.கே. மங்கலம் | நற்பணி P. அமலோற்பவஆரோக்கியராணி<br>நற்பணி A. சகாயதமிழ்செல்வி |
| 26.10.25 | தூய ஆவியார் கோவில் இராசசிங்கமங்கலம் | நற்பணி J. ஆரோக்கியசாமி<br>நற்பணி A. ஆரோக்கியமேரி<br>நற்பணி S. தைனஸ்மேரி |

## ஒரு பணியளாரின் மன்றாட்டு



அருள்தரும் ஆண்டினை நாங்கள் முழக்கமிட்டு அறிவிக்க யூபிலி விழா கொண்டாட எங்களை அழைத்தவரே இறைவா!

உமது கருணையையும், இரக்கத்தையும் நினைவு கூர்ந்து அறிக்கையிடவும், எங்கள் பழைய அடிமைத்தன வாழ்விலிருந்து விடுதலை பெற்றதை நினைத்து மகிழ்ந்திடவும், நம்பிக்கை தரும் எதிர்நோக்கு எங்கள் வாழ்வை நிரப்பிட செபிக்கவும், ஒன்று கூட்டினீர். விழாக் கொண்டாடியதில் திருப்தி அடையாமல் நாங்கள் இயற்கையைப் பாதுகாக்கவும், இறை வார்த்தையைப் பரப்பிடவும் தேவையான அனைத்தையும் செய்திடும் ஆற்றல் தர வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறேன்

## தஞ்சை மறைமாவட்ட புதிய பணியாளர்கள் பயிற்சி

| நாள் | மையங்கள் | நெறியாளர்கள் |
|---|---|---|
| 05.10.25<br>I | திரு இருதய ஆண்டவர் கோவில். புதுக்கோட்டை | நற்பணி A. ஆரோக்கியசாமி<br>9843323439<br>நற்பணி S. அந்தோணிபிரகாஷ்<br>9787791869 |
| 05.10.25<br>I | திரு இருதய ஆண்டவர் கோவில். கோட்டைக்காடு | நற்பணி S. மோட்சஅலங்காரம்<br>9843490206<br>நற்பணி A.R. சூசைராஜ்<br>8248102600 |
| 12.10.25<br>II | உலக இரட்சகர் கோவில் பட்டுக்கோட்டை | நற்பணி L.ஆரோக்கியசாமி<br>9150579311<br>நற்பணி A.ஆரோக்கியசாமி<br>9843323439 |
| 12.10.25<br>II | புனித மரியன்னை அன்னை கோவில். பூதலூர் | செயலர்<br>9787967272<br>நற்பணி M. லூயிஜான்போஸ்கோ<br>9443503618 |
| 19.10.25<br>III | புனித வளனார் கோவில் அம்மாபேட்டை | நற்பணி S. பால்ராஜ்<br>9789077287<br>நற்பணி S. அந்தோணிபிரகாஷ்<br>9787791869 |
| 19.10.25<br>III | புனித அடைக்கலமாதா கோவில் திருமயம் | நற்பணி A. சகாயராஜா<br>7010407853<br>நற்பணி S. சகாயராணி<br>9047495319 |
| 26.10.25<br>IV | புனித பாத்திமா அன்னை கோவில் திருவாரூர் | செயலர்<br>9787967272<br>நற்பணி S. மோட்சஅலங்காரம்<br>9843490206 |
| 26.10.25<br>IV | குழந்தை இயேசு கோவில் நமணசமுத்திரம் | நற்பணி A. சகாயராஜா<br>7010407853<br>நற்பணி S. சகாயராணி<br>9047495319 |

# புனித புருனோ (அக்டோபர் 06)



என் காலடிக்கு உம் வாக்கே விளக்கு' என் பாதைக்கு ஒளியும் அதுவே' (திபா 119:105)

புருனோ ஜெர்மனியில் உள்ள கோலோக்னே (லக்னே) என்னும் இடத்தில் இருந்த ஒரு வசதியான குடும்பத்தில் 1030 ஆம் ஆண்டு பிறந்தார். இவர் தன்னுடைய கல்வியை ரெய்ம்ஸ் என்ற இடத்தில் முடித்து அறிவில் சிறந்தவராய் விளங்கி வந்தார். இவருடைய அறிவையும் ஞானத்தையும் கண்டு, இவரை மறைமாவட்டப் பள்ளிகளில் போதிக்குமாறு கேட்டுக் கொண்டார்கள். இவரும் மாணவர்களுக்கு நல்லமுறையில் கற்றுத்தந்தார். இதன்பிறகு இவரை மறைமாவட்டத்தின் வேந்தராக நியமித்தார்கள். அந்தப் பணியையும் இவர் சிறப்புடனே செய்துவந்தார்.

இந்த காலக்கட்டத்தில் திருச்சபையின் நடவடிக்கைகளில் அரசர்களும் முக்கியப் பதவிகளில் இருந்தவர்களும் தலையிடுவதும், ஆயர்களை, குருக்களை பொறுப்புகளில் நியமிப்பதுமாக இருந்தார்கள். இதனை அப்போது திருத்தந்தை கடுமையாக எதிர்த்தார். அதற்கு முற்றுப் புள்ளியும் வைத்தார். திருத்தந்தை அவர்களின் இந்த முடிவுக்கு புருனோ மிகவும் உறுதுணையாக இருந்தார். இதனால் புருனோ பல்வேறு எதிர்ப்புகளைச் சந்தித்து, தன்னுடைய பதவியிலிருந்து விலகவேண்டிய சூழலும் ஏற்பட்டது.

தன்னிடமிருந்த பதவி பறிக்கப்பட்ட பின்பு, புருனோ சில நாள்களை செபத்திலும் தவத்திலும் செலவழித்து வந்தார். ஒருநாள் அவர் இவ்வாறு செபித்துக் கொண்டிருக்கும்போது, தனியாக ஒரு துறவற சபையை நிறுவி, அதிலே தன்னுடைய வாழ்நாள் முழுவதையும் செலவழித்தால் என்ன என்ற யோசனை பிறந்தது. இதனை அவர் கிரநோபிளில் ஆயராக இருந்த ஹதிக் என்பவரிடத்தில் எடுத்துச் சொன்னார். அவரும் இதற்குச் சரியென்று சொல்ல, புருனோ தன்னுடன் ஒருசில நண்பர்களை சேர்த்துக்கொண்டு நகருக்கு வெளியே சென்று, அங்கே ஒரு துறவற சபையை நிறுவி, செப தவ வாழ்வில் ஈடுபட்டு வந்தார். பின்னாளில் தான் உருவாக்கிய அந்த சபைக்கு 'கார்த்தூசியன்' என்று பெயரிட்டார்.

நாட்கள் செல்லச் செல்ல புருனோ உருவாக்கிய இந்த சபையில் நிறைய இளைஞர்கள் வந்து சேர்ந்தார்கள். அவர்களுக்கு எல்லாம் இவர் தன்னுடைய சபை ஒழுங்குகளை எடுத்துச் சொல்லி, அவர்களை நல்ல துறவிகளாக வாழப் பணித்தார். இதைவிட மேலான ஒரு காரியத்தையும் தன் சபைத் துறவிகளோடு செய்தார். அது என்னவென்றால், விவிலியத்தைப் பிரதி எடுத்தது. அச்சகம் இல்லாத அந்த காலகட்டத்தில், புருனோ தன்னுடைய சபைத் துறவிகளிடம், விவிலியத்தை பல பிரதிகளாக எழுதச் சொல்லி, அதனை எதிர்கால சந்ததியினருக்காகப் பாதுகாத்து வந்தார்.

இதற்குப் பிறகு இவரை திருத்தந்தை இரண்டாம் உர்பன் தன்னுடைய ஆலோசகராக நியமித்தார். துறவற வாழ்வையே விரும்பிய புருனோ, சில காலம் திருத்தந்தைக்கு ஆலோசகராக இருந்துவிட்டு இத்தாலியில் இருந்த கலாப்ரியா என்ற இடத்திற்கு வந்து, அங்கு தன்னுடைய வாழ்வின் கடைசி நாள்களை செபத்திலும் தவத்திலும் செலவழித்து வந்தார். இவர் 1101 ஆம் ஆண்டு இறையடி சேர்ந்தார். 1674 ஆம் ஆண்டு திருத்தந்தை பத்தாம் கிளமெண்ட் அவர்களால் புனிதர் பட்டம் கொடுக்கப்பட்டது.

அவரைப் போன்று அஞ்சாது, துணிவோடிருந்து உண்மையை உரக்கச் சொல்வோம். அதன்வழியாக இறையருள் நிறைவாய் பெறுவோம்.

நற்பணி **செங்கோல்மேரி,** காளையார்கோவில்




கடந்த பகுதியில் அடிப்படை ஆலோசனை திறன்கள் பற்றிபார்த்தோம். இந்த பகுதியில் ஒரு திறமையான உளவியல் ஆலோசகரின் நுண் திறன்கள் (Microskills) பற்றிபார்ப்போம்.

நுண் திறன்கள் (Microskills) என்பவை, பயனுள்ள ஆலோசனைக்கு அடிப்படையாக அமையும் அடிப்படைத் தொடர்புத் திறன்கள் ஆகும். இவை ஆலோசகர்கள் நல்லுறவை உருவாக்கவும், தகவல்களைச் சேகரிக்கவும், மற்றும் வாடிக்கையாளரின் சுய-ஆராய்வை எளிதாக்கவும் பயன்படுத்தும் குறிப்பிட்ட, கண்காணிக்கக்கூடிய நடத்தைகள்.

**உளவியல் ஆலோசகரின் நுண் திறன்கள்** (Microskills):

1. கவனம் செலுத்தும் நடத்தை (Attending Behaviour)
2. கேள்வி கேட்டல் (Questioning)
3. பிரதிபலித்தல் (Reflecting)
4. சுருக்கமாகக் கூறுதல் (Summarizing)
5. ஊக்குவித்தல் (Encouraging)
6. எதிர்கொள்ளுதல் (Confrontation)
7. கவனம் செலுத்துதல் (Focusing)

இந்தத் திறன்களில் தேர்ச்சி பெறுவதன் மூலம், ஒரு ஆலோசகர் பாதுகாப்பான மற்றும் ஆதரவான சூழலை உருவாக்கி, வாடிக்கையாளர்கள் தங்கள் எண்ணங்களையும் உணர்வுகளையும் பகிர்ந்துகொள்ள அதிகாரம் அளிக்க முடியும். இந்த பகுதியில் முதல் மூன்று உளவியல் ஆலோசகரின் நுண் திறன்கள் (Microskills) பற்றி சுருக்கமாக பார்க்கலாம்.

**நுண் திறன்களும் அவற்றின் பயன்பாடும்**

1. கவனம் செலுத்தும் நடத்தை (Attending Behaviour)

கவனம் செலுத்துவது என்பது, வாடிக்கையாளர் மீது வேண்டுமென்றே கவனம் செலுத்தி, இந்த கவனத்தை வாய்மொழி மற்றும் வாய்மொழியற்ற சைகைகள் மூலம் தெரிவிக்கும் திறனாகும். இது ஒரு வலுவான சிகிச்சை உறவை உருவாக்குவதற்கான மூலக்கல்லாகும்.

- பார்வை/கண் தொடர்பு (Visual/Eye Contact): பொருத்தமான கண் தொடர்பைப் பேணுவது, நீங்கள் வாடிக்கையாளரின் கதையில் ஈடுபட்டுள்ளீர்கள் மற்றும் ஆர்வமாக இருக்கிறீர்கள் என்பதைக் காட்டுகிறது. இது கலாச்சார ரீதியாக உணர்திறன் கொண்டதாகவும், இரு தரப்பினருக்கும் வசதியானதாகவும் இருக்க வேண்டும்.

- குரல் பண்புகள் (Vocal Qualities): உங்கள் குரலின் தொனி, ஏற்ற இறக்கம் மற்றும் வேகம் ஆகியவை வாடிக்கையாளரின் உணர்ச்சி நிலைக்குப் பொருந்துவதாக இருக்க வேண்டும். அமைதியாகவும், ஒத்த வேகத்திலும் பேசுவது இணக்கம் மற்றும் புரிதல் உணர்வை உருவாக்கும்.

- உடல் மொழி (Body Language): ஒரு திறந்த மற்றும் நிதானமான தோரணையை ஏற்றுக்கொள்வது, நீங்கள் அணுகக்கூடியவர் மற்றும் ஏற்கக்கூடியவர் என்பதைக் குறிக்கிறது. இதில் லேசாக முன்னோக்கி சாய்வது, கைகளையும் கால்களையும் குறுக்கிடாமல் இருப்பது, மற்றும் அமைதியான, உறுதியான நடத்தையைப் பயன்படுத்துவது ஆகியவை அடங்கும்.

2. **கேள்வி கேட்டல்** (Questioning)

பயனுள்ள கேள்வி கேட்டல், ஆலோசகர்களுக்குத் தகவல்களைச் சேகரிக்கவும், எண்ணங்களைத் தெளிவுபடுத்தவும், மற்றும் வாடிக்கையாளரின் தேடலுக்கு வழிகாட்டவும் உதவுகிறது. வாடிக்கையாளரை ஒரு விசாரணையில் இருப்பது போல் உணர வைப்பதைத் தவிர்க்க, கேள்விகள் நோக்கத்துடன் மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

- திறந்த கேள்விகள் (Open Questions): இந்தக் கேள்விகள் வாடிக்கையாளர்களை விரிவாகவும், விரிவான பதில்களை வழங்கவும் ஊக்குவிக்கின்றன. இவை பெரும்பாலும் 'என்ன,' 'எப்படி,' அல்லது 'முடியுமா' எனத் தொடங்கும்.

- உதாரணம்: 'அது உங்களை எப்படி உணர வைத்தது?' அல்லது 'இன்று உங்களை ஆலோசனைக்கு வர வைத்தது எது?'

- மூடிய கேள்விகள் (Closed Questions): இந்தக் கேள்விகள் குறுகிய, குறிப்பிட்ட பதில்களை (எ.கா., 'ஆம்' அல்லது 'இல்லை') பெறுகின்றன. அவை குறிப்பிட்ட உண்மைகளைச் சேகரிக்க அல்லது விவரங்களைத் தெளிவுபடுத்த பயனுள்ளதாக இருக்கும். உதாரணம்: 'நீங்கள் கோபமாக உணர்ந்தீர்களா?' அல்லது 'இது எப்போது நடந்தது?'

3. **பிரதிபலித்தல்** (Reflecting)

பிரதிபலித்தல் என்பது, வாடிக்கையாளர் கூறியதை மீண்டும் கூறிச் சுருக்கி, புரிதலைக் காண்பிக்கவும் ஆழமான தேடலை ஊக்குவிக்கவும் உதவும் திறனாகும். பிரதிபலித்தலில் இரண்டு முதன்மை வகைகள் உள்ளன.

**உள்ளடக்கத்தின் பிரதிபலிப்பு** (Reflection of Content):

இதில் வாடிக்கையாளர் பகிர்ந்துகொண்ட உண்மைத் தகவல்களை மீண்டும் கூறுவது அடங்கும். இது நீங்கள் கேட்பதையும், கதையைப் புரிந்துகொள்வதையும் காட்டுகிறது. உதாரணம்:வாடிக்கையாளர்: 'வேலை மற்றும் எனது குடும்பப் பொறுப்புகள் காரணமாக நான் மிகவும் திணறி வருகிறேன்.'ஆலோசகர்: 'உங்கள் வேலை மற்றும் வீட்டிலிருந்து நிறைய அழுத்தத்தை நீங்கள் உணர்வது போல் தெரிகிறது.'

**உணர்ச்சியின் பிரதிபலிப்பு** (Reflection of Feeling):

இதில் வாடிக்கையாளர் நேரடியாகவும் மறைமுகமாகவும் வெளிப்படுத்தும் உணர்ச்சிகளை அடையாளம் கண்டு, வார்த்தைகளால் வெளிப்படுத்துவது அடங்கும். இது வாடிக்கையாளர்கள் தங்கள் உணர்வுகளைப் பற்றி மேலும் அறிந்திருக்கவும், அவர்களின் அனுபவத்தை உறுதிப்படுத்தவும் உதவுகிறது.

**உதாரணம்:**

- வாடிக்கையாளர்: 'நான் அவனிடம் நான் நன்றாக இருப்பதாகச் சொன்னேன், ஆனால் உள்ளே நான் மிகவும் கோபமாக இருந்தேன்.'
- ஆலோசகர்: 'மேலோட்டமாக, நடந்ததைப் பற்றி நிறைய கோபம் இருப்பது போல் தெரிகிறது.'

**அசைபோடஅரைநிமிடம் :**

'உளவியல் ஆலோசகரின் நுண் திறன்கள் நமது பணியை மேன்படுத்தும்.'

சகோ. S.**ஜான் ஜோ பிரபாகர்.** SHJ.

மனநல ஆற்றுபடுத்துநர், பரமக்குடி.

## ஆண்டுத் தியானம் 2026 நற்செய்தி அறிவிப்பு பணிக்குழு. சிவகங்கை

| நாள் | குழு | இடம் | தியான வழிகாட்டி | நெறியாளர்கள் |
|---|---|---|---|---|
| அக்டோபர் 10,11& 12 | IV | அமைதியகம் காயாவயல் | Rev.Fr. ஜெயக்குமார் MSFS தென்றல் ஆன்மீக மையம். கொடைரோ | நற்பணி A. வில்லியம் நற்பணி A. பெமிலா |
| அக்டோபர் 17,18& 19 | V | அருள்சான்று நிலையம் பரமக்குடி | Rev.Fr. ஜெயக்குமார் MSFS தென்றல் ஆன்மீக மையம். கொடைரோ | நற்பணி K. ஜஸ்டின் கபிரியேல் நற்பணி A. பிரான்சிஸ்சேவியர் |
| அக்டோபர் 24,25& 26 | VI | அமைதியகம் காயாவயல் | Rev.Fr. ஜெயக்குமார் MSFS தென்றல் ஆன்மீக மையம். கொடைரோ | நற்பணி X. சகாயஜூலி நற்பணி S. தைனிஸ்மேரி |
| நவம்பர் 07,08& 09 | VII | அருள்சான்று நிலையம் பரமக்குடி | Rev.Fr. ஜெயக்குமார் MSFS தென்றல் ஆன்மீக மையம். கொடைரோ | நற்பணி S. இராஜேந்திரம் நற்பணி சூ. ஜஸ்டின் |
| நவம்பர் 14,15& 16 | VIII | அமைதியகம் காயாவயல் | Rev.Fr. ஜெயக்குமார் MSFS தென்றல் ஆன்மீக மையம். கொடைரோ | நற்பணி L. ஆரோக்கியசாமி நற்பணி A.R.ஆசைராஜ் |

**நற்செய்திப் பணிக்குழுவின் இணைய தளம்** www.arulchandrunilayam.org

## யூபிலி ஆண்டில் என்னை மன்னியும்

- உடைந்த உள்ளத்தார்க்கு அருகில் ஆண்டவர் இருக்கின்றார் என்பதை மறந்து, உள்ளம் உடைந்து நொறுங்குண்ட போது ஆண்டவரின் உடனிருப்பை உணராமல் மனிதரின் உதவியை மட்டும் நாடிச் சொன்றதை எண்ணி மனம் வருந்துகிறேன். இறைவா! என்னை மன்னியும் (திப 24:18).

- என் வாய் ஞானமிகு சொற்களை உரைக்கும், என் மனம் விவேகவானவற்றை சிந்திக்கும் என்பதை அறிந்தும் தகாத வார்த்தைகளைக் கூறி பிறரது மனதை புண்படுத்தி விவேகமற்ற முறையில் வாழந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன். இறைவா! என்னை மன்னியும் (திப 49:3).

- பிள்ளைகளே! தந்தையின் போதனைக்குச் செவிசாயுங்கள் என்பதை அறிந்தும் தந்தையின் சொல்லைக் கேளாமல் மனம்போன போக்கில் வாழ்ந்து வந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன். இறைவா! என்னை மன்னியும் (நீமொ 4:1).

- பொய்ச்சான்று சொல்பவர்கள் தண்டனைக்குத் தப்பமாட்டார் என்பதை அறிந்தும் சுயநலத்திற்காக பொய்யுரைத்து வாழ்ந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன். இறைவா! என்னை மன்னியும் (நீமொ 19:5).

நற்பணி S.P. **சவரிமுத்து**, இராம்நகர்

## செப வீரர்களுக்கு

**இம்மாத செபக் கருத்து**

- உலகில் அமைதி, அன்பு, நீதி மற்றும் மனித மாண்புகள் நிலை பெற பல்வேறு சமயங்கள் ஒருமனப்பட்டு உரையாட, உழைக்க
- உலகில் குறிப்பாக இந்தியாவில் மத நல்லிணக்கம் தழைத்தோங்க
- போரினாலும், போராட்டங்களினாலும் நம்பிக்கை இழந்து வாழும் மக்கள் அமைதியுடன் வாழும் சூழல் உருவாக
- புதிய பணியாளர்கள் பயிற்சிகள் சீடத்துவத்துக்கு தங்களை அர்ப்பணிக்கும் பொதுநிலையினரை உருவாக்க.
- நல்ல மழைபெய்து விவசாயம் செழிக்க
- இந்தியாவில் சனநாயக, மதச்சார்பின்மை கோட்பாடுகளும், அமைப்புகளும் பாதுகாக்கப்பட
- தமிழகத்தில் மக்கள் நலன் பேணும் அரசியல் சூழல் உருவாகி வலுப்பெற

**விரும்பத்தக்க செயல்பாடு:**

- எதிர்நோக்கில் ஆழம் பெற கிறிஸ்து மைய ஆன்மீகச் செயல்பாடுகளில் ஈடுபடல்.

# புதிய பணியாளர்கள் பயிற்சி


சாயல்குடி


சிவகங்கை


இராம்நாடு


திருமயம்


புதிய பணியாளர்கள் பயிற்சி-திருவாரூர்


தேர்ந்து தெளிதல் தியானம் - அமைதியகம்




தேர்ந்து தெளிதல் தியானம் - அமைதியகம்

படங்களைக் கொண்டு இறைவசனத்தை கண்டுபிடியுங்கள்?

படங்களைக் கொண்டு நினைவுக்கு வரும் இறைவார்த்தையை சட்டென்று சொல்லுங்கள் பார்ப்போம்.

துப்பு வேண்டுமா? **நீதி மொழிகள் 4-6 அதிகாரங்களுக்குள்**






வானவில் உலா-காளையார்கோவில்



வானவில் உலா-திருவரங்கம்



வானவில் உலா-முத்துப்பேட்டை



வானவில் உலா-பரமக்குடி



அருளமுது ஆதாரக்குழுக்கூடுகை
அமைதியகம்



வானவில் உலா-சருகணி





அருளமுது ஆதாரக்குழுக்கூடுகை
பரமக்குடி

is published on behalf of the Commission for Proclamation,
Diocese of Sivagangai from Arulchandru Nilayam (Faith Resource Development Centre), Brothers of the Sacred Heart, Ulaganathapuram,
Paramakudi - 623 707, Ramnad Dist.
www.arulchandrunilayam.org |Email: arulchandrupmk@gmail.com

# வானவில் கூடுகை - 2025
## முதல் நாள்



















# வானவில் கூடுகை – 2025
## இரண்டாம் நாள்














**வானவில் கூடுகை - 2025**

**மூன்றாம் நாள்**



















அர்ப்பணம் ஏற்ற புதிய பணியாளர்கள்